Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 4, 2022

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 04, 2022 | ஒளி: 07 கதிர்: 223 | பக்கம்:10 | FREE

## சபையைக் கூட்டுவது குறித்து திங்கள் கூட்டம்

நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைகளுக்கு மத்தியில் உரிய சுகாதார ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து, பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கும், எதிர்வரும் அமர்வுகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள அலுவல்கள் குறித்து ஆலோசிப்பதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு எதிர்வரும் திங்கட்கிழமை (07) கூடவுள்ளது.

தொடர்ச்சி P2



# இன்று 74ஆவது சுதந்திர தினம்

## இராஜாங்க அமைச்சர் அருந்திக இராஜினாமா




தென்னை, கித்துல், மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தனது பதவியை நேற்று (03) இராஜினாமா செய்தார்.

தொடர்ச்சி P2

### மருத்துவ பீட மாணவர்கள் மீது தாக்குதல்

## அருந்திகவின் மகன் உட்பட அறுவருக்கு விளக்கமறியல்



களனி பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் உட்பட 6 சந்தேகநபர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்ற நீதவான் ஹெஷான் டி மெல், நேற்று (03) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

### பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல்

# 12 வருடங்கள் உருண்டோடின

### மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு சம்பந்தன் கடிதம்



பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு எதுவித காத்திரமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு வருடங்களில் மேற்கொள்ளவில்லை என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் தூதரக உயர் ஸ்தானிகளுக்கு டிசெம்பர் 31ஆம் திகதியன்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடித்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது; 2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் ஆயுதம் தாங்கிய இன மோதல் முடிவுற்ற ஒரு வாரத்தினுள் 2009 மே 23 ஆம் திகதியன்று, ஐ.நா செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில், இலங்கை அரசாங்கத்தாலும் ஐக்கிய நாடுகளாலும் ஏனைய பல விடயங்களோடு கூடவே பின்வருமாறு கூறும் ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



### உயர்தரப் பரீட்சையை இடைநிறுத்துமாறு

## தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட பரீட்சை அட்டவணையை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி சமூக ஆர்வலர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (03) தள்ளுபடி செய்தது.

இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளபட்ட பின்னரே, மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



## 197 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

### பட்டியலில் ரஞ்சனின் பெயரில்லை

இன்றைய தினம் கொண்டாடப்படவுள்ள 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் 197 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக, சிறைச்சாலைகள் திணைக்களம், நேற்று (03) அறிவித்தது.

எனினும், இந்தப பட்டியலில் முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இடம்பெறவில்லை என சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மீனவர்கள் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை

### விசேட அதிரடிப் படை குவிப்பு



எம். றொசாந்த்

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் கடந்த நான்கு நாள்களாக மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தக் கோரி திங்கட்கிழமை (31) முதல் சுப்பர் மடம் பகுதியில் மீனவர்கள் வீதியை மறித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்நிலையில் நேற்று

### அரச விழாவைப் புறக்கணிக்க

## கர்தினால் தீர்மானம்



இன்று (04) நடைபெறவுள்ள 74ஆவது சுதந்திர தின நிகழ்வின் அரச விழாவில் கலந்து கொள்வதில்லை என, கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தீர்மானித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, கத்தோலிக்க சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முஸ்லிம்களின் சமயக் கல்வியில் மூக்கை நுழைக்கிறது அரசாங்கம்

அரசாங்கம் சிலரைக் கொண்டு ஆணைக்குழுக்களை நியமித்து, முஸ்லிம்களின் சமயக் கல்வி விவகாரத்தில் மூக்கை நுழைத்துக் கொண்டு இருக்கிறது என்று, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். ஓட்டமாவடியில் அண்மையில்

தொடர்ச்சி P2




### சுதந்திர தினமான இன்று

## குருந்தூருக்கு விரைகிறது சுமந்திரன் அணி

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவில் உள்ள குருந்தூர் மலைக்குச் செல்ல தடையேதும் இல்லை என உச்ச நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாகவும் குறித்த விடயங்கள் தொடர்பில் பரிசீலிக்க இன்று (04) குருந்தூர் மலைக்கு செல்லவுள்ளதாகவும் தடுத்தால் எதிர்கொள்வோம் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடக பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### அபாயா சர்ச்சை:

## ஆசிரியையை இடமாற்றுமாறு கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டம்

பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் முஸ்லிம் ஆசிரியையை இடமாற்றக் கோரி, குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர், வலயக் கல்வி அலுவலகத்தை நேற்று (03) முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த பாடசாலையில் நேற்றுமுன்தினம் (02) கடமையேற்கச் சென்ற ஆசிரியைக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையே, அபாயா அணிந்துகொண்டு சென்றமையால் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அதிபரும் ஆசிரியையும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று (03) காலை 8.00 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக ஒன்று கூடிய பெற்றோர், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு பேரணியாகச் சென்று, அங்கு ஒன்றுகூடி பதாதைகளைத் தாங்கியவாறு கோஷமெழுப்பினர்.

தொடர்ச்சி P2

## ரஞ்சன் இன்று விடுதலை பெறுவார்



74 சுதந்திர தினமான இன்று (04) ரஞ்சன் ராமநாயக்க பூரணமாக விடுதலை செய்யப்படுவார் என, தாம் உறுதியாக நம்புவதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (03) காலை சென்று பார்வையிட்டதன் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## இராஜாங்க அமைச்சர் அருந்திக இராஜினாமா

களனி பல்கலைக்கழகத்தின் ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தனக்கு தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டால், தான் பதவியை இராஜினாமா செய்வேன் என இராஜாங்க அமைச்சர் முன்னதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ராகம மருத்துவ பீடத்தின் 4ஆம் வருட மாணவர்கள் குழுவொன்று புதன்கிழமை (02) தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

23 வயதுடைய சந்தேகநபர் தங்கொட்டுவ பிரதேசத்தில் வசிப்பவர் என தெரிவித்த பொலிஸார், சட்டத்தரணி ஊடாக ராகம பொலிஸாரிடம் சரணடைந்ததன் பின்னர் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய தனது மகனும் மாணவனும் நண்பர்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

மேலும், அரச வாகனத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சம்பவம் தொடர்பில் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இதேவேளை, தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார், தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது எனத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண, இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வாகனத்தை செலுத்திய சாரதி, தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் சாரதி அல்ல என்றும், இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட சாரதி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அருந்திகவின்...

ஏற்கெனவே சம்பவம் தொடர்பில் ஆறுபேர் கைது செய்யப்பட்டு, நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் தனது சட்டத்தரணியூடாக பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோவின் மகன், நேற்று (03) அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதன்படி, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், தாக்குதலில் காயமடைந்த மருத்துவ மாணரொருவர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனம், களுபோவில பிரதேசத்தில் வைத்து ராகம பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

எஞ்சிய சந்தேக நபர்களை கண்டறிவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதான பொலிஸ் பரிசோதகர் அசேல பெரேரா தெரிவித்தார்.

## 197 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

அதன்படி, வெலிக்கடை சிறைச்சாலையில் 17 கைதிகளும் மஹர சிறைச்சாலையில் 20 கைதிகளும், கேகாலை சிறைச்சாலையில் 18 கைதிகளும் களுத்துறை சிறைச்சாலையில் 13 கைதிகளும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலையாகவுள்ளனர்.

மேலும், போகம்பர சிறைச்சாலையில் 11 கைதிகளுக்கும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் 11 கைதிளுக்கும் வாரியபொல சிறைச்சாலையில் 10 கைதிளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சபையை கூட்டுவது...

இந்தக் கூட்டம், பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் திங்கட்கிழமை (07) பிற்பகல் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஜனகாந்த சில்வா தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றம் எதிர்வரும் 08ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கூடவிருப்பதுடன், 11ஆம் திகதி வரை நான்கு நாள்கள் அமர்வுகளை நடத்துவதற்கு இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதற்கும், இதன் பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு 08ஆம் திகதி கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமீபத்திய வாரங்களில் 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் 30க்கும் மேற்பட்ட பாராளுமன்ற பணியாட் தொகுதியினரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ரஞ்சன் இன்று விடுதலை பெறுவார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு கலைஞராக, அவர் கலைத் துறைக்கு பெரும் சேவை ஆற்றி வந்தார். அவர் ஆற்றிய பொது சேவையை மேலும் வலுவாக முன்னெடுக்க அவரது கொடுப்பனவுகள், சம்பளம், சலுகைகள், வரப்பிரசாதங்கள் அனைத்தையும் பொதுச் சேவைக்கே அர்ப்பணித்த தலைவர் என்ற வகையில், நாளை (இன்று) அவர் முழுமையாக விடுதலை பெறுவார் என நம்புகிறோம்.

மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை அளித்து, மனிதாபிமானியின் பூரண விடுதலைக்காக அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். மனித நேயத்திற்காகவே இந்த பரிந்துரையை முன்வைக்கிறேன்" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

# 12 வருடங்கள் உருண்டோடின

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான கடப்பாட்டை இலங்கை மீளவலியுறுத்தியது.

சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை கையாள்வதற்கான ஒரு பொறுப்புக்கூறல் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் கோடிட்டுக் காட்டினார்.

அப்பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு எதுவித காத்திரபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு வருடங்களில் மேற்கொள்ளவில்லை.

இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2021 மாரச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தோடு, ஏழு (7) தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இதனிடையே இலங்கை பெருமளவுக்கு அமல்படுத்தப்படாத பல்வேறு கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளது.

பொறுப்புக் கூறல் விடயத்தைக் கையாண்டு தீர்க்காதுவிட்டதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கமானது, இராணுவமயப்படுத்தல், சிவில் சமூக மற்றும் ஊடகத் துறையினர், குடும்ப உறுப்பினர்கள் அத்துடன், தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் ஏனையவர்கள் ஆகியோரைப் புதிதாகக் கைது செய்வதோடு கூடவே அரசியல் கைதிகளை காலவரையறையற்று தடுத்து வைத்திருத்திருக்கிறது.

பல்வேறு அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் மூலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக் குடியேற விடாது தடுத்தல், பாரம்பரிய கூட்டு காணி உரிமைகளையும் கால்நடைகளின் மேய்ச்சல் உரிமைகளையும் மறுத்தல், அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை கண்காணித்தலை தீவிரப்படுத்தல் ஆகியன அடங்கலாக இலங்கை தமிழர்களை அடக்கி ஒடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களை அவர்தம் பாரம்பரிய வாழ்விடங்க லிருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாக, தொல்லியல் அகழ்வாரய்ச்சிகள், வன விலங்கு பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு எனும் போர்வையில் தற்போது நடைபெற்று வரும் காணிச் சூறையாடல்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

பிரதேச எல்லைகளை மீள் வரையறை செய்தல் மற்றும் எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினையின் எந்த ஒரு தீர்வையும் அர்த்தமற்றதாக்கும் வண்ணம் வரலாற்று ரீதியான தமிழ் பேசும் பகுதிகளை சிங்களக் குடியேற்றாளர்களைக் கொண்டு குடியேற்றல் நிகழ்ச்சித் திட்டமொன்றில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்த நிச்சயமற்ற நிலைமையில், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் நாடுகின்றனர்.

குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான தனது கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்பதையும் அம் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரே உறுதியான வழியாக தமிழ் தேசிய பிரச்சினையைக் கையாண்டு தீர்ப்பதற்கு அது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்குமாறு உறுப்பு நாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.

கலந்துரையாடல் தொடர்களில், உங்கள் கருத்துகளை முன்வைத்து, பொறுப்புக்கூறல் மற்றும் தமிழர் தேசிய பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் ஆகியன தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கு இயைந்தொழுகுமாறு அதனை வலியுறுத்துமாறும் தமிழ் மக்கள் கேட்கின்றனர்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கைக்குள் எமது வரலாற்றுரீதியான வாழ்விடப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுய மரியாதையோடும் கண்ணியத்தோடும் பாதுகாப்புடனும் வாழ்வதை உறுதிப்படுத்துமுகமாக இலங்கை அரசாங்கத்தை அதன் அனைத்து வாக்குறுதிகளுக்கும் அமைவாக சரியான திசையில் நகர்வதற்கு தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ் மக்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றனர் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம்களின் சமயக் கல்வியில் மூக்கை நுழைக்கிறது அரசாங்கம்

நடைபெற்ற முன்பள்ளி பாடசாலை ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது,

பாராளுமன்றத்தில் நடக்கின்ற கல்வி அமைச்சு சம்பந்தமான கலந்துரையாடல்களில் பாட விதானங்களை தயாரிப்பதில் நிறைய நிபுணர்கள் வந்து விளக்கமளிக்கின்றபோது சில பாட விதானங்களுடைய குறைபாடுகளையும், அவற்றினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் முன் வைக்கின்றனர்.

இப்போது அரசாங்கம் சிலரைக் கொண்டு ஆணைக்குழுக்களை நியமித்து, முஸ்லிம்களின் சமயக் கல்வி விவகாரத்தில் மூக்கை நுழைத்துக்கொண்டு இருக்கிறது.

இப்போது நாடு முழுவதிலும் இஸ்லாம் பாட புத்தகங்களை மீளப் பெறப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வெளி வந்திருந்ததைக் கண்டேன்.

இவ் விடயம் தொடர்பில் நான் தேசிய கல்வி நிறுவகத்திலும், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்திலும் கடமையாற்றும் சிலருடன் பேசினேன்.

ஊர் ஊராக செல்லும் செயலணியின் "ஞானம்" உள்ள தலைவர் எல்லா இடத்திலும் கூட்டங்களைக் கூட்டி, முஸ்லிம்கள் மத்தியில் பயங்கரவாதத்துக்கு மூல காரணமாக அமைவது இஸ்லாமிய பாட நூல்கள் என அறிவுறுத்துவதுடன், இஸ்லாம் பாடம் படிப்பிக்கின்ற போது கலிமாவைக் கூறக்கூடாது என்கிறார்.

ஏனென்றால், "அல்லாஹ்வை தவிர வேறு இறைவன் இல்லை" என்பது மற்ற மதங்களுடன் பிரச்சினைகளை உருவாக்கும் என அச்சுறுத்துகின்றார். அவர்களது அறிவு மட்டம் அவ்வளவு தான். அதற்கு எங்களில் சிலரும் கூட்டுச் சேர்ந்துக்கொள்கின்றனர். அவரால் முன் வைக்கப்படுகின்ற கருத்துக்கள் சமூகங்களுக்கு மத்தியில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்திவருகின்றன.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சுடன் கலந்துரையாட இருக்கின்றோம். சமூகமே முன்வந்து ஜம்இய்யத்துல் உலமாவுடன் சேர்ந்து பிரச்சினைகள் ஏதும் இருப்பின் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் "ரித்தத்" சம்பந்தமாக சில விடயங்களை தீர்க்க வேண்டும் என நினைத்தேன். நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்கு காரணமாக அவ்வாறானவற்றை மிகைப்படுத்திக் காண்பிப்பதற்கு எத்தனிக்கின்றனர்.

இன்று பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகமே அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்துகின்றது. அதில் இருந்து விடுபடுவதற்காகவே எமது சமூகத்துக்கு மேல் இவற்றைத் திணிக்கின்றனர். இவ்வாறான செயல்களின் விளைவு இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக எழக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது என்றார்.

# ஆசிரியையை இடமாற்றுமாறு கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டம்

"அடாவடி ஆசிரியை எமக்கு வேண்டாம்", "தமிழ் கலாசாரத்தை மிதிக்காதே", "அதிபரை அடித்த ஆசிரியை வேண்டாம்", "உனது கலாசாரம் உனக்கு; எனது கலாசாரம் எனக்கு" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோஷமிட்டனர்.

குறித்த இடத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை செய்வதற்கு சிலரை வருமாறு அழைத்தார். எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர்.

மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் நடந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் வினயமாக வேண்டிக் கொண்டார்.

நீதிமன்ற நடவடிக்கை இருப்பதால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை சமூகத்தோடு பேச்சுவார்த்தைக்கு வருவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி

இந்த மனுவின் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சின் செயலாளர் கபில பெரேரா மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுநோய் காரணமாக நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் நீண்ட காலத்துக்கு மூடப்பட்டிருந்ததாகவும், மாணவர்களின் கல்விக்கு இது பெரும் இழப்பை ஏற்படுத்தியதாகவும், அவர்களால் தமது பாடத்திட்டத்தை கூட சரியாக பூர்த்தி செய்ய முடியவில்லை என்று மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## கர்தினால் தீர்மானம்

அங்கு மேலும் தெரிவித்த அவர், சுதந்திர தினத்தை முன்னிட்டு பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் நடைபெறவிருந்த பிற்பகல் ஆராதனையையும் கர்தினால் இரத்துச் செய்துள்ளார் என்றார்.

பொரளை அனைத்துப் புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான கைதுகள் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றைக் கொண்டே கர்தினால் மல்கம் ரஞ்சித் இந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளதாக அருட்தந்தை காமினி தெரிவித்தார்.

நாட்டுக்கு ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு முந்தைய ஆண்டுகளில் செய்தது போல், ஏனைய அனைத்து தேவாலயங்களிலும் ஆராதனைகள் இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

இன்றைய அரச விழாவில் கலந்து கொள்ளாவிட்டாலும் கர்தினாலின் பிரதிநிதியொருவர் பங்கேற்பார் என மேலும் தெரிவித்தார்.

## குருந்தூருக்கு விரைகிறது சுமந்திரன் அணி

இங்கு மேலும் கருத்து தெரிவித்த சுமந்திரன்,

"மக்கள் உணவில்லாமல் பட்டினியை எதிர்நோக்கியுள்ள இந்தக் கால கட்டத்திலே கடந்த சில நாள்களாக கொழும்பிலே ஜெட் விமானங்கள் பறந்து திரிந்து நாளைய அணிவகுப்பிற்கு எண்ணெயை விரையமாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள். நாளைய தினம் விமரிசையாக சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கின்றார்கள்.

திட்டமிட்ட நேரடியான சிங்கள குடியேற்றங்களுக்கு மேலதிகமாக இப்படியான ஒரு செயல்முறையையும் அரசாங்கம் பிரயோகித்து வருகின்றது. இப்பொழுது தொல்லியல் திணைக்களம் இதிலே ஈடுபடுகின்ற போது, புத்த சமயத்தை ஒட்டிய சின்னங்களை கண்டுபிடிப்பதாக பல இடங்களிலே வடக்கிலும் கிழக்கிலும் பாரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். அதன் பிரதிபலனாக எங்களுடைய மக்கள் தங்களுடைய வழிபாட்டு உரிமைகளை இழந்து நிற்கின்றார்கள். பல இடங்களில் இதனைக் காணக்கூடியதாக உள்ளது.

வெடுக்குநாறி மலையிலே அவ்வாறன ஒரு சம்பவம் இடம்பெற்றது. குருந்தூர் மலையிலே ஒரு வருடத்திற்கு முன்னர் நீண்டகாலமாக வழிபட்டுவந்த இடத்திலே எங்கள் மக்கள் வழிபடாமல் தடுக்கப்பட்டுள்ளனர். ஆகவே எங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றது. நாங்கள் சுதந்திரம் இல்லாத நாட்டிலே வாழ்கின்றோம் என்பதை பெப்ரவரி 04 ஆம் திகதியே உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்ற ஒரு நடவடிக்கையாக குருந்தூர் மலைக்கு நாளை அதிகாலையிலே செல்லவிருக்கின்றோம்.

இது சம்மந்தமாக ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்தில நிலுவையிலே இருக்கின்றது. எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் இவர்கள் மூவரும் இதிலே மனுதாரர்களாக இருக்கிறார்கள் நான் அந்த வழக்கிலே ஆயராகின்றேன். அந்த வழக்கிலே பிரதிவாதியாக குறிக்கப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றத்திலே வந்து நாங்கள் அங்கே செல்வதற்கு தடையேதும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஆகையாலே தடையேதும் இல்லையென்றால் நாங்கள் நாளை அங்கே செல்லவிருக்கின்றோம். செல்லுவதை யாராவது தடுத்தால் அதை அந்த நேரத்திலே நாங்கள் எதிர்கொள்வோம்" என்று கூறியுள்ளார்.



பாராளுமன்றத்துக்குள்

# கொரோனா அதிகரித்தது

**அமைச்சர் அமரவீரவுக்கு கொரோனா; சபாநாயகர் வீடு திரும்பினார்**

பாராளுமன்றத்தில் பணியாற்றும் பணியாளர்களில், மேலும் 14 தொற்றாளர்கள் நேற்று (03) இனங்காணப்பட்டனர். பாராளுமன்ற பணியாளர்கள் 65 பேர், அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே, மேலும் 14 பேர் இனங்காணப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 25 பணியாளர்கள் கடந்த 31ஆம் திகதியன்று இனங்காணப்பட்டனர். அதில், பாராளுமன்ற நிதி பணிப்பாளரும் அடங்குவார்.

இதேவேளை, சபாநாயகர் உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க, பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக 12 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர் என அடையாளம் காணப்பட்டனர். அந்தவகையில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சிகிச்சைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



காணாமல் போன மீனவர்

## சடலமாக மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம், உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாடு ஆழ்கடலில் காணாமல் போன மீனவர் ஒருவரின் சடலம் நேற்று (03) பெரியபாடு பிரதேச ஆழ்கடலில் மிதந்து கொண்டிருந்த வேளையில், மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம், பாலாவி பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (டிசெ.31) பெரியபாடு ஆழ்கடலில் இயந்திரப் படகு மூலம் இருவர் கடலட்டை பிடிக்கச் சென்ற போது, ஒருவர் ஆழ்கடலில் ஒட்சிசன் உதவியுடன் இறங்கி கடலட்டையை பிடித்துக் கொண்டு மேலே வந்த போது, குறித்த இயந்திர படகில் இருந்த மற்றைய மீனவர் காணாமல் போயுள்ளார். இயந்திர படகு மட்டுமே அங்கு இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, உடப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த இரண்டு நாள்களாக காணாமல் போன குறித்த மீனவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பொலிஸாருடன் இணைந்து கடற்படையினரும் மீனவர்களும் இவ்வாறு காணாமல் போன மீனவரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று (03) காலை சடலம் ஆழ்கடல் பகுதியில் மிதிந்துள்ளதை அவதானித்த மீனவர்கள், சடலத்தை இயந்திர படகு மூலம் கரைக்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து, சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம்

தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஆலோசனை கோரி, சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கான முன்மொழிவுகளை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் நாள்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளதா, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் பிரவேசிக்குமா என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களின் தொடர்ச்சியான கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளின் வருகைக்கு ஜப்பான் உதவுவதாகவும், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றது.

200 கிலோ கிராம் போதைப்பொருள் கடத்திய கப்பல் சிக்கியது

## ஈரானியர்கள் ஒன்பது பேர் சிக்கினர்

■ கனகராசா சரவணன்

ஈரானில் இருந்து கடல்வழியாக 200 கிலோ கிராம் போதைப் பொருளை, இலங்கைக்குக் கடத்தி வந்த ஈரான் நாட்டைச் சேர்ந்த ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடல் எல்லையில் வைத்து கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும், கொழும்பு கடற்படை தளத்திற்கு நேற்று (03) வியாழக்கிழமை கொண்டுவரப்பட்டுள்ளனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ரி.ஏ.டி.ஏ.ரி. சுபோதவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், கடற்படையுடன் இணைந்து, சுமார் 15 தினங்களுக்கு மேலாக இரவு பகலாக கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதற்கமைய, ஈரானில் இருந்து 200 கிலோ கிராம்



போதைப் பொருளை கடத்தி வந்த கப்பலை, கடலில் வைத்து கைப்பற்றியுள்ளனர். இதன்போது, சுமார் 200 கிலோ கிராம் போதைப் பொருளை, கடத்தல்காரர்கள் கடலில் வீசியுள்ளனர். எனினும், ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தங்களுடைய பாவனைக்காக வைத்திருந்த போதைப்பொருள் மட்டுமே கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட கடத்தல் காரர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சம்பிக ரணவக்கவுக்கு எதிரான

## அதி குற்றச்சாட்டுகளை வாசிக்க திகதி குறிப்பு

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான வழக்கில், அதிகுற்றச்சாட்டுப் பத்திரத்தை வாசிப்பதற்கான தினமாக எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதியை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே, அறிவித்தார்.

நேற்றைய தினம் (03) வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கைத் தொடர முடியாது என்ற பிரதிவாதியின் ஆரம்ப ஆட்சேபனையை நிராகரித்த நீதிபதி, குற்றப்பத்திரிகையை வாசித்த பின்னர், சாட்சிய விசாரணைக்கு திகதியை நிர்ணயிப்பதாக அறிவித்தார்.

2016ஆம் ஆண்டு, ராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி



ஆகியோருக்கு எதிராக பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை, பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் அமைச்சர் சம்பிக்க மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுகதனவி விவகாரம்

## மனுக்கள் மீதான விசாரணை ஒத்திவைப்பு

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான ஒப்பந்தங்களின் சட்டபூர்வமான தன்மையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்ககளை பெப்ரவரி 7ஆம் திகதிக்கு, உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, எல்.டி.பி. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று (03) மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள், பெப்ரவரி 7, 8, 9, 10, 14 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வாய்மூல சமர்ப்பணங்களை பெப்ரவரி 10 ஆம் திகதி சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், மன்றுக்கு அறிவித்தார்.



## அருந்திக முன்மாதிரியானவர்

இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோவின் புதல்வர் தவறு செய்திருந்தால் சட்டத்தை செயற்படுத்துவது சிறந்த பண்பு. அரசியல்வாதி என்ற ரீதியில் தனது மகனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து, அருந்திக பெர்ணான்டோ சிறந்த முன்மாதிரியாக செயற்பட்டுள்ளார் என கிராமிய வீதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் மகன் இதனுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டிருந்தால் கூட, அவருக்கு எதிராக சட்டத்தை பிரயோகிக்க வேண்டுமே தவிர, அருந்திக பெர்ணான்டோவுக்கு தண்டனை வழங்குவது நல்ல விடயமாக அமையாது என்றார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஓர் இலட்சம் வேலைத்திட்டங்களின் கீழ், ராகம, வெலிசர, முல்கந்தகுட்டி பிரிவெனா விஹாரையில் மூன்று மாடி கட்டடத்தை நேற்று (03) திறந்து வைத்து உரையாடும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சட்டத்தை செயற்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பார்.



இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோவின் புதல்வர் தொடர்பான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது, அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்; இதுவும் நல்ல செயற்பாடாகும்.

எனவே, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ சட்டத்துக்கு வாய்ப்பளித்துள்ளார். அது தொடர்பில் விசாரணை செய்து, நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கும் போது, நீதிமன்றம் தீர்ப்பை வழங்கும். இன்று நாட்டில் டொலர் பிரச்சினை உள்ளது. பல நாடுகள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் போது சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை, நிதியுதவி மற்றும் கடன் உதவிகளை வழங்குகின்றது. எனவே தனது அபிப்பிராயத்தின்படி இலங்கையில் இன்று காணப்படும் பிரச்சினையை முகாமைத்துவம் செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது நல்ல விடயமாகும் என்றார்.

காரும் ஓட்டோவும் மோதியதில்

## இருவருக்கு காயம்

■ துஷிதகுமார சில்வா

பெந்தோட்டை- காலி வீதியின் பழைய பிரதேச சபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (03) காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து, களுத்துறை மற்றும் பெந்தர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது ஓட்டோவும் காரும் நேருக்கு நேர் மோதியுள்ளதுடன் ஓட்டோ கடுமையாக சேதமடைந்து, அதில் பயணித்த இருவர் கடுங்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, காரை செலுத்தி வந்த 27 வயதுடைய விற்பனை முகவர், பெந்தர பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பெந்தோட்டையைச் சேர்ந்த பெண்ணொருவரும் ஓட்டோ சாரதியுமே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



குளவி கொட்டுக்கு இலக்காகி

## 09 பேர் பாதிப்பு

■ எஸ். சதீஸ்

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பொகவந்தலாவ மேல் பிரிவு தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 09 தொழிலாளர்கள், குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (3) பிற்பகல் 12.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. மரத்தில் இருந்த குளவி கூடு கலைந்து, தொழிலாளர்களை தாக்கியதில் 08 பெண்களும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வை.எல்.பி.பஸ்நாயக்க தெரிவித்தார்.



உயர்மட்ட பேச்சுவார்த்தையை அடுத்து

# போராட்டம் நிறைவுபெற்றது

■ சகா, நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரால், மக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டம், உயர்மட்ட பேச்சுவார்த்தையை அடுத்து நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது.

கல்முனை விஹாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் தலைமையிலான மாநகர சபை உறுப்பினர் ச. ராஜன் அடங்கிய பொதுமக்கள், புதன்கிழமை (02) முதல் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை அமைந்துள்ள கட்டடத்தொகுதியின் பிரதான கதவை மூடி, வழிமறித்து தமது சுகாதாரப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரி, அவ்விடத்திலேயே அமர்ந்திருந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் பகல் பூராகவும் ஈடுபட்டனர்.



இது தொடர்பில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. அவையாவும் தோல்வியில் முடிந்தன. அதனையடுத்து, குறித்த வீட்டுத்திட்ட கழிவுக்குழி பிரச்சினை தொடர்பான கூட்டம் அம்பாறை அரசாங்க அதிபர் எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் கல்முனை பிரதேச செயலகத்தில் புதன்கிழமை 4. 30 மணிக்கு இடம்பெற்றது . மாநகர சபை கழிவகற்றும் வாகனம் கொண்டு குழியினை சுத்தப்படுத்தி பொது வடிகானுக்குள்ளும் வீதியிலும் சேர்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.



# ஆசிரியையிடம் நலன் விசாரித்தார் தௌபீக் எம்.பி

■ பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை ஶ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு கடமையேற்க சென்றிருந்த ஆசிரியையான பஹ்மிதா தாக்குதலுக்குள்ளான நிலையில் திகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரின் உடல்நலம் தொடர்பில் விசாரிக்க திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் நேரடியாகச் சென்று சந்தித்து, குறித்த விடயம் தொடர்பில் விசாரித்துவிட்டு அச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய சகல முன்னெடுப்புகளையும் எடுத்துள்ளதாகவும் அந்த ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை நேரடியாகச் சந்தித்து, குறித்த சம்பவம் தொடர்பாக அவர் உரையாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



# வாசிகசாலை திறப்பு

■ என் .ஹரன்

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் IUVDP-2021 திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட பாடசாலை வீதி மற்றும் வாசிகசாலை என்பவற்றின் திறப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது, தங்கவேலாயுதபுரம் வடக்கு, தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி.ஏ நாஹிபின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யு.எல்.ஏ அஸீஸ் விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் என். தனஞ்ஜெயன், மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.மோகன் பிரேம்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வரவு செலவு திட்டத்தின் மூலம் ஓர் இலட்சம் வேலைகள், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, பொத்துவில் ஆதார வைத்தியசாலை தாய்,சேய் கட்டடத்தை திருத்தம் செய்வதற்கென 1.2மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த வேலைத்திட்டம் தேசிய ரீதியாக நாடு பூராகவும் நேற்று (03) மு.ப. 08.52 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கிணங்க, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.எம். தாஜூதீன் தலைமையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். ரஜாப், தாதிய பரிபாலகர் பீ.ரகுநாதமூர்த்தி, விடுதி முகாமையாளர் எம்.எம். அமானுல்லா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படாதுவிடின்

# தமிழ் பேசும் மக்களை புறக்கணிப்பதாகும்

■ அ . அச்சுதன்



சுதந்திர தினத்தில்கூட தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படா விட்டால், அது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களையும் அரசாங்கம் புறக்கணிப்பதாகவே அமையும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கைவாழ் அனைத்து இன மக்களினதும் பங்களிப்பால் ஆங்கிலேயரின் 133 வருடகால ஆட்சிக்குப் பின்னர் 1948ஆம் ஆண்டு இன்றைய தினத்தில் இலங்கை தீவுக்கான சுதந்திரம் கிடைத்தது.

எனினும், அந்தச் சுதந்திரக் காற்றை தமிழ் பேசும் மக்களும் சுவாசிப்பதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்காக தமிழ் பேசும் மக்களும் தங்களுடைய பங்களிப்பை இன்றுவரை வழங்கி வருகின்றார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது என்றார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி

# மக்கள் கையெழுத்து பிரசாரம் ஆரம்பம்

■ செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்



இலங்கையில் பயங்கரவாதச் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி, பொதுமக்கள் கையெழுத்து போராட்டம் ஒன்றை முல்லைத்தீவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (03) தொடக்கி வைத்துள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி தலைவர் கி. சேயோன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டு போராட்டத்தை தொடக்கி வைத்துள்ளனர்.



இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் மோசமாகப் பாதிப்பு:

# படகு, வலைகளை எரித்த மீனவர்

■ எஸ். தில்லைநாதன்

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்ட மீனவர் ஒருவர், தொடர்ந்தும் கடற்றொழில் செய்ய முடியாது எனத் தெரிவித்து தனது படகு, வலைகளை எரித்து அழித்துள்ளார்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, ஆலடிப் பகுதியில் நேற்று (03) காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கடற்தொழிலாளி, சுனாமி அனர்த்தத்தின் காரணமாக படகு, வலைகள் முற்றாக இழந்திருந்த நிலையிலும் அவருக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தொடர்ந்தும் கடல் தொழில் செய்து வந்த இவர், இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறல் காரணமாக, தொடர்ச்சியாக சொத்து அழிவுகளைச் சந்தித்து வந்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான அவர், இலங்கை அரசாங்கமும் கடற்படையும் இந்திய இழுவைப் படகுகளை ஒருபோதும் தடை செய்யப் போவதில்லை. எனவே கடலில் இறங்கி தொழில் செய்ய முடியாது. இதனால் படகு, வலைகளை வைத்திருந்து எவ்வித பிரயோசனமும் இல்லை எனத் தெரிவித்து, தனது பயன்பாட்டில் உள்ள மீன்பிடி படகினையும் வலைகளை தீயிட்டு எரித்துள்ளார்.



# யாழ். மேயரை சந்தித்த ஹனா சிங்கர்

■ டி விஜித்தா

யாழ்ப்பாணம் சென்றுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருக்கும், யாழ்ப்பாண மாநகர சபை மேயர் வி. மணிவண்ணனுக்கும் இடையில் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (02) இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் இ.த. ஜெயசீலனும் கலந்துகொண்டார்.

இதன்போது, "தற்போதும் எங்களுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றன. வலி. வடக்கு பகுதியில் பல நூற்றுக்காணக்கான ஏக்கர் தனியார் காணிகள் இராணுவம், கடற்படை, விமானப்படை என தங்களுடைய படைத்தேவைகளுக்காக அபரிக்கப்படுகின்றன.

இந்திய அரசாங்கத்தால் யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் அமைப்பதற்கு முன்னர் இலங்கை அரசாங்கமும் இந்தியா அரசாங்கமும் கலாசார மண்டபத்தை அமைத்து, அதனை மாநகர சபையிடம் கையளிப்பது என்று ஒப்பந்தம் செய்தது. ஆனால், இக்கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர், தற்போது இது மாநகர சபைக்குத் தரமுடியாது, மத்திய அரசாங்கத்திடம் தரவேண்டும் என்று அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன" என்று சிங்கரிடம் மணிவண்ணன் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மன்னாருக்கு திடீர் விஜயம்

**காற்றாலைகள் நிறுவக்கூடிய இடங்கள் குறித்து அறிக்கை கோரல்**



■ ஹொசேரியன் லம்பேட்

மன்னாருக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் (02) சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய, மன்னார், நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மன்னார் 'தம்பபவனி' காற்றாலை மின்நிலையத்தை பார்வையிட்டார்.

தம்பபவனியின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி ராஜபக்ஷ, புதிய காற்றாலைகள் அமைக்க கூடிய இடங்கள் குறித்து அறிக்கை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

> **காற்றாலை மின் நிலையங்கள் மூலம் 248 மெகா வாட் மின்சாரம் தேசிய மின் தொகுப்பில் சேர்க்கப்படுகிற நிலையில், அனைத்து நடவடிக்கைகளை பார்வையிட்டார்**

காற்றாலை மின் நிலையங்கள் மூலம் 248 மெகா வாட் மின்சாரம் தேசிய மின் தொகுப்பில் சேர்க்கப்படுகிற நிலையில், குறுகிய காலத்தில் அதனை விளம்பரப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது, மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ராஜபக்ஷ கண்காணிப்பதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

# கிளிநொச்சியில் காணாமல்போன சிறுமி மீட்பு

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி நகர் பகுதியில் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் காணாமல் போன 15 வயது சிறுமி, அவரது பெற்றோரால் மாத்தளை, செலகம பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

பெற்றோருடன் வசித்து வந்த குறித்த சிறுமி காணாமல் போயிருந்ததாக அவரது பெற்றோரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுப்பதில் அசமந்தப் போக்கு காட்டி வருவதாகவும் குறித்த சிறுமியின் பெற்றோரால் தெரிவிக்கப்பட்ட நிலையில்

> **மாத்தளை பகுதியிலிருந்து சிறுமி தப்பியோடி, தனது பெற்றோரின் அலைபேசிக்கு தொடர்பு கொண்ட நிலையில், குறித்த சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டார்**

சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியை கிளிநொச்சி நகரத்தில் இருந்து ஒரு முஸ்லிம் நபர், இரண்டு பெண்பிள்ளைகளின் உதவியுடன் கடத்திச் சென்றதாகவும், மாத்தளை பகுதியிலிருந்து சிறுமி தப்பியோடி, தனது பெற்றோரின் அலைபேசிக்கு தொடர்பு கொண்ட நிலையில், குறித்த சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டு, பெற்றோரால் கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் (02) கொண்டு வரப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதுடன், மருத்துவ பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்திய சாலையில் பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பற்றைக் காடுகளுக்கு தீ வைப்பதால்
# பல ஏக்கர் காடுகள் தீக்கிரை



■ இரா.யோகேசன்

வட்டவளை, கினிகத்தேனை பகுதிகளில் இனந்தெரியாதோரால் பற்றைக் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவம் தற்போது அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கினிகத்தேனை பிரதேசத்தின் கடவளை தொடக்கம் தியகல வரையுள்ள பகுதியில் நேற்று முன்தினம் (02) ஏற்பட்ட தீயால், சுமார் 50 ஏக்கருக்கு மேற்பட்ட பற்றைக்காடுகள் எரிந்துள்ளன.

அத்துடன், மவுண்ட்ஜின் தோட்டப் பகுதியிலுள்ள பற்றைக்காற்றில் ஏற்பட்ட தீயால், சுமார் 10 ஏக்கர் பற்றைக்காடுகள் எரிந்துள்ளன.

மலையகத்தில் தற்போது வரட்சியான வானிலை நிலவுகின்றது. இதைப் பயன்படுத்திக்கொண்டு பற்றைக்காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதுடன், நீர் நிலைகளின் நீர்மட்டங்களும் குறைவடைந்து செல்கின்றன.

இதனால் மலையகத்தின் பல பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



## சீன் தோட்ட
# அம்மன் கோவிலில் திருட்டு


■ நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சீன் தோட்டத்தில் உள்ள அம்மன் கோவில் உடைக்கப்பட்டு, சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த நகைகள், உண்டியலில் இருந்த பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (02) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த தோட்ட கோவில் நிர்வாகம் மற்றும் தோட்டத் தலைவர்களால் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பூண்டுலோயா பொலிஸார் சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கம்பளையில்
# மீண்டும் வெடித்து சிதறிய அடுப்பு



■ நவி

கம்பளை நகரில் இருக்கும் வீடு ஒன்றில், சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவம், நேற்று முன்தினம் (02) இடம்பெற்றுள்ளது.

சிலிண்டர் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வாரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள கம்பளை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

# கும்பாபிஷேகம்

பொகவந்தலாவ, செப்பல்டன் பீ. எஸ் டிவிஷன், ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் திருப்பணிகள் வெற்றிகரமாக நிறைவுற்று, நூதன பிரதிஷ்டா பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருவிழாவில், நேற்று வியாழக்கிழமை வெள்ளோட்டம் இடம்பெற்றதுடன், இன்று (04) கிரியைகள் நடைபெற்று அனைத்து தெய்வங்களும் பிரதிஷ்ட்டை செய்யப்படவுள்ளது.

நாளை ஐந்தாம் திகதி சனிக்கிழமை, காலை 9 மணிமுதல், மாலை 5 மணிவரை எண்ணெய் காப்பு நடைபெறும்.

ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதுடன், பூஜை வழிபாடுகள் அனைத்தும் சிவஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும்.

## ஓர் இலட்சம் கிராமிய அபிவிருத்தித் திட்டம்
# அடிதடியில் ஆரம்பம்

■ ராமு தனராஜா



ஓர் இலட்சம் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், நேற்று (03) காலை பசறையில் இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைதியின்மை ஏற்பட்டது.

பசறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோணக்கலை, பசறை டிவிஷன் தோட்ட காணியில், பிரதேச செயலகத்தால் வாசிகசாலை, கிராம அலுவலக காரியாலய கட்டடத் தொகுதி நிர்மாணிப்பதற்காக நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஏற்பாடு செய்யபட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க கலந்து கொண்ட நிலையில், கோணக்கலை தோட்டத்தின் நான்கு டிவிஷன்களை சேர்ந்த சுமார் 200 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், இந்த நிகழ்வுக்கு எதிர்ப்பை தெரிவித்தனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த காணியானது, சுமார் 50 வருடங்களுக்கு முன்பிலிருந்து தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடமாகக் இருக்கும் நிலையில், அந்தக் காணி வளாகத்துக்குள் அடிக்கல் நாட்டுவதற்கு மக்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதன்போது காணியின் உரிமையாளர், சாமர சம்பத் எம்.பி, பிரதேச சபை செயலாளர் ஆகியோருக்கிடையில், நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் குறித்த தோட்டக் காணியை அரசாங்கம் சுவீகரிக்காது என உறுதியளித்தார்.

இதன்பின்னர், பிரதேச மக்கள் அவ்விடத்தைவிட்டு கலைந்து செல்ல முற்பட்ட வேளை, மலையக மக்கள் முன்னணியின் பசறை அமைப்பாளரும் பசறை பிரதேச சபை உறுப்பினருமான கண்மணி சிவனேசன், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்கவால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்ததால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அத்துடன் அவரைத் தெரிவு செய்த மக்கள் முன்பாகத் தாக்கப்பட்டதால், மன உளைச்சலுக்கு உள்ளாகி விஷம் அருந்தியதாகத் தெரிவித்து, குறித்த உறுப்பினர் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தான் அவ்வாறானதோர் எவ்வித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொங்கல் விழா...





தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களின் பொங்கல் விழா, பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.ம். பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: பி. கேதீஸ்)

## மாத்தளை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில்
# நடமாடும் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நடமாடும் வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாத்தளை பிரதேச சபையின் தவிசாளர் கபில பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தொகுதி அடிப்படையிலான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், கழிவுகளை உரியமுறையில் அகற்றுதல், சுகாதார பிரச்சினைகளைக் குறைத்தல், பிரதேச சபையின் சேவைகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தல் என்பன இந்த நடமாடும் சேவை மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

மாதாந்தம் இரண்டு நாள்கள் அதற்காக ஒதுக்கி, தெரிவு செய்யப்பட்ட தொகுதிகளில் இந்த நடமாடும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்கீழ் கொரோனா தடுப்பூசி, கிராமிய வீதிகளை இருமருங்கிலும் துப்புரவு செய்தல், கழிவுகளை அகற்றல் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பிரதேச சபையின் தவிசாளர் கபில பண்டார தெரிவித்துள்ளார்.



# சுதந்திர தின வாழ்த்துகள்



# இராஜாங்க அமைச்சர் ஜீவன்



இலங்கை 74ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது என்று தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தனது சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 73 சுதந்திரதினக் கொண்டாட்டங்களைக் கண்டிருந்த இ.தொ.கா, 74ஆவது சுதந்திர தினத்தில் மலையக சமூகத்தின் மேம்பாட்டிற்காக தம்மை அர்ப்பணித்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இடைவிடாது தம்பணியைத் தொடரும் என்பதை இந்தச் சுதந்திர தினத்தில் உறுதி கொள்வதாகவும் அச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

# அரவிந்தகுமார் எம்.பி



நாட்டின் பெருந்தோட்டத்துறை மக்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்தத் தமிழ் மக்களுக்கும், எமது நாட்டின் சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றேனென, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தாக்கத்தால் நாட்டினதும் மக்களினதும் இயல்பு நிலை பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டதை யாவரும் அறிவர். ஏற்பட்ட அனைத்து பாதிப்புகளிலிருந்தும் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் பாரிய பணியில் ஆட்சியாளர்கள் பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளார்.

# ரமேஸ்வரன் எம்.பி



நாட்டின் 74 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் மலையக சமூகத்தின் மாற்றம், ஏற்றத்திற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இடைவிடாது அர்ப்பணித்துச் செயற்படுமென இ.தொ.கா நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தமது சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலையகத்திலும், இந்த நாட்டின் எல்லா பகுதிகளிலும் வசித்து வரும் இந்திய வம்சாவளி மக்கள் உரிமைகள், சலுகைகளைப் பெறவேண்டும் என்பதே எமது ஆசை. பாதுகாப்பான தேசம் சுபீட்சமான நாடு என்பதற்கமைய எமது கட்டுக்கோப்பை மேலும் பலப்படுத்தி, இதன் வாயிலாக எமக்குரிய உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த 74ஆவது ஆவது சுதந்திர தினத்தில் நாம் திடசங்கற்பம் பூணுவோம் என தெரிவித்துள்ளார்.

## மலையக பல்கலைகழகம் விரைவில்
# நுவரெலியாவில் உருவாக்கப்படும்

■ மலைவாஞ்ஞன்



மலையகத்துக்கான பல்கலைக்கழகம் ஒரு சில காரணங்களால் தாமதமானாலும் கூட, மிக விரைவில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் உருவாக்கப்படும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்ஸின் நிதிச்செயலாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

நாமகள் கபரக்கலை தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி மற்றும் உயர்தரம் ஆரம்பிப்பதற்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மலையத்தைக் கல்வியின் மூலம் தான் மாற்றம் முடியும் என்பதனை உணர்ந்து, கடந்த காலங்களில் சௌமிய மூர்த்தி தொண்டமா ன், ஆறுமுகன் தொண்டமான் தற்போது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய அனைவரும் கல்விக்கு முக்கியத்து வமளித்துத்தான் செயற்பட்டு வந்துள்ளனர்; வருகின்றனர்.

ஒரு சில அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் மாத்திரம் பேசிவிட்டால், எல்லாம் வந்து விடும் என்று நினைக்கிறார்கள். உண்மையில் எதையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் தலைவர்களுடன்தான் பேச வேண்டும். அதனை அன்று முதல் இன்று வரை இ.தொ. காவின் தலைவர்கள் செய்து வந்துள்ளார்கள் என்றார்.

# 74 வருடங்களுக்கு முன் வென்றதை சுதந்திரமாய் அனுபவிப்போம்

சகல திசைகளையும் உற்றுநோக்கினால், அனைத்துக்கும் விலை கூறும் உலகமிது. விலை மதிக்கமுடியாத, பல்வேறான துன்ப, துயரங்கள், நெருக்கடிகள் உள்ளிட்டவற்றுக்கு முகங்கொடுத்து, இன்றைக்கு 74 வருடங்களுக்கு முன்னர், சுயாட்சிசார் சுதந்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இம்முறை தொனிப்பொருளாக, 'நாளைய சவால்களை வெற்றிக்கொள்ளும் வளமான நாடு' எனக் குறிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னர், பல்வேறான நெருக்கடிகள், அதாளபாதாளத்தில் விழுந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையில், இன்றைய தினத்துக்கான தொனிப்பொருள் மிகச் சரியானது.

அத்தொனிப்பொருளின் பிரகாரம், இன்னுமொரு வருடம் எவ்வாறு கடத்தப்பட்டுள்ளது என்பதெற்கெல்லாம், பவளவிழா சுதந்திர தினமே பதிலளிக்கும். பன்மைத்துவ இனங்கள் வாழும் நாட்டில், எவ்விதமான பேதங்களுமின்றி, இன்றைக்கு 74 வருடங்களுக்கு முன்னர் வெற்றி கொண்ட சுதந்திரத்தை, அவ்வாறே அனுபவிக்கின்றோமா என்றால், விடை பூச்சியமாகும். நாட்டில் நடப்பவற்றையும் அமைக்கப்படும் குழுக்கள், பேதங்கள், குரோதங்கள், வெறுப்பேற்றும் பேச்சுகள், அரசியலமைப்பு திருத்தத்துக்கான முயற்சியின் போதெல்லாம், முன்வைக்கப்படும் விமர்சனங்கள், மக்கள் பிரதிநிதிகளின் உசுப்பேத்தும் பேச்சுகளை பார்க்குமிடத்து, ஒரு கொடியின் கீழிருந்து சுதந்திரத்தை ஏன் பெற்றோமென, முதியவர்கள் சிலரைச் சிந்திக்கத் தூண்டும்.

1948 பெப்ரவரி நான்காம் திகதியன்று, நாடு சுதந்திரம் அடைந்தது. அதற்கு முன்னர், சோல்பரி அரசியலமைப்பு இலங்கைக்கு மேலாட்சி நிலையை அளித்தது. சுதந்திர நாட்டின் முதலாவது பிரதமராக டட்லி சேனநாயக்க பொறுப்பேற்றார்.

1948ஆம் ஆண்டு, இலங்கை சுதந்திரம் அடைந்தாலும், பிரித்தானிய அரசின் கடற்படை திருகோணமலை துறைமுகத்தில் 1956ஆம் ஆண்டு வரை நிலைகொண்டிருந்தது. அரிசிப் பங்கீட்டு முறையை நீக்கியமை காரணமாக, நாடு முழுவதும் ஏற்பட்ட குழப்ப நிலையால் முதலாவது பிரதமர் டட்லி சேனநாயக்க பதவி விலகினார்.

வரலாற்றை அவ்வப்போது திருப்பிப் பார்த்தோமெனில், இன்று நாமெல்லாம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு, அன்றிருந்த ஆட்சியாளர்கள் தங்களையும் தங்களுடைய ஆட்சியையும் பாதுகாத்துக்கொள்வதற்காக, இன ரீதியிலான சிந்தனைகளை இரத்தத்துக்குள் எவ்வாறு ஏற்றினார்கள் என்பது புலனாகும்.

டட்லி சேனாநாயக்க பதவி விலகியதை அடுத்து, எஸ்.டப்ளியூ. ஆர். டி பண்டாரநாயக்க 1956இல் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். 'சிங்களப் பண்பாட்டின் பாதுகாவலன்' எனத் தன்னை அறிவித்துக் கொண்ட இவர், மூன்று வருடங்கள் பதவி வகித்தார். இவர் சர்ச்சைக்குரிய சிங்களம் மட்டும் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன்மூலம் சிங்கள மொழி நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக்கப்பட்டது.

அவ்வாறு கொஞ்சம், கொஞ்சமாக விதைக்கப்பட்ட வெறுப்புகள்தான், நாடு இவ்வளவுக்குப் பின்னோக்கி இருக்கின்றமைக்கான பிரதான காரணிகளில் ஒன்றாகக் குறிப்பிடலாம். இன்னுமே அவை கைவிடப்படவில்லை என்பதை நினைத்து, சுதந்திர இலங்கையின் ஒவ்வொரு பிரஜைகளும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

அவற்றையெல்லாம் களைந்து, 74 வருடங்களுக்கு முன்னர் வென்றெடுத்த சுதந்திரத்தை அனுபவிக்க, வழிசமைக்க வேண்டுமென வினயமாகக் கோருகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

இளமையில், வறுமையில் வதங்கி, ஏக்கத்துடன் உலகைப் பாரத்து நொந்தவர்கள், காலம் கடந்த பின்னர், கல்வி, செல்வம், பதவிகளில் முன்னேறுவது சகஜமானது. இதற்கு அவர்களின் உழைப்பும் முயற்சிகளுமே காரணமாகும்.

எனினும், ஒருசிலர் தங்கள் ஏழ்மை நிலையில் இருந்தபோது, திரும்பியும் பார்க்காத நபர்களைப் புறக்கணித்து நடப்பதுண்டு. ஆனால், முன்னேற்றமடைந்த, வசதியற்ற அநேகர் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அருஞ்சேவை புரிந்து வருகின்றனர்.

வெளிநாடுகளுக்குச் சென்ற அநேகர், சமூகத்துக்கும் நாட்டுக்கும் அருஞ்சேவைகளை ஆற்றிவருகின்றனர். வெளிநாடுகளுக்குச் சென்ற இத்தகையவர்கள், குடும்பத்துக்கு மட்டுமல்ல, தாங்கள் வாழ்ந்த பிரதேசத்துக்கும் பாரிய கொடைகளை வழங்கி வருகின்றனர்.

வணக்கஸ்தலங்கள், கோவில்கள், வாசிகசாலைகள், பொதுநிறுவனங்கள், ஏதிலிகள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு இயலுமான கொடைகளை வாரிக்கொடுத்து வருகின்றார்கள்.

அறிஞர்கள், தலைவர்கள் எனப்பலரும் வறுமையுடன் உழன்று, உலகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள். இன்னமும் பலர் உயர்நிலைக்கு வந்தபடியே உள்ளனர்.

ஒருவரின் உயர்ச்சியைக் கண்டு, அவர்களின் அனுபவங்களை இன்றைய தலைமுறையினர் உணரவேண்டும். உலகப் பிரஜைகள் அனைவரும் நம்மவர்கள் என உணரவேண்டும். எல்லோர் மூலமாகவும் நல்லனவற்றை அறிந்துகொள்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 05

# 'அங்கிள்' அரசியல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திர இலங்கையின் பிரதான அரசியல் கட்சியாக அறியப்படும் ஐக்கிய தேசிய கட்சியை, 'அங்கிள்' அரசியல் நடத்தும் கட்சி என்று கேலி செய்வதுண்டு. அக்கூற்று நியாயமானது என்பதை நிறுவும் வகையிலேயே, அக்கட்சியின் வரலாறு அமைந்துள்ளது.

சேனாநாயக்காக்கள், கொத்தலாவலகள், ஜெயவர்தனாக்கள் என்று மூன்று குடும்பங்களுக்கும் உள்ளேயே கட்சியின் அதிகாரம் சுற்றிச் சுழல்கிறது. அதன் பொருள், இம்மூன்று குடும்பங்களுக்குள்ளும் முரண்பாடுகள் இல்லை என்பதல்ல. இம்மூன்று குடும்பங்களுக்கும் இடையிலான அதிகார மோதலே, ஐ.தே.கவின் வரலாறு என்பதுதான் துயரம்மிகு உண்மை. இலங்கை அரசியல் 'மாமனார்-மருமகன்' அரசியலில் இருந்து, குடும்ப அரசியலாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது. இந்த நோய் கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளையும் பீடித்துள்ளது.

1970க்குப் பின்னர், ஆர். பிரேமதாஸவின் எழுச்சியே ஐ.தே.கவில் இக்குடும்பங்களின் அதிகாரத்தைக் கேள்விக்கு உட்படுத்தியது. மேட்டுக்குடி உயர்வர்க்க அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த இக்குடும்ப அரசியல் தலைவர்களுக்கு நேர்மாறாக, அடித்தட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பிரேமதாஸ, தனது அரசியலைக் கட்டியெழுப்பினார். அதனாலேயே அவரால் மேட்டுக்குடிகளுடன் போட்டியிட்டு வெல்ல முடிந்தது.

ஐ.தே.கவின் உருவாக்கம், இலங்கையில் வளர்ந்து கொண்டிருந்த தொழிற்சங்க, இடதுசாரி அரசியலுக்கு எதிரான, மேட்டுக்குடிகளின் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான ஒரு செயற்பாடாகவே நோக்க வேண்டியுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் பின்னரான பிரித்தானியக் கொலனியாதிக்கத்தின் சரிவு, மூன்றாமுலக நாடுகள் பலவற்றில் தொடங்கிய கொலனியாதிக்கத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள், இலங்கையையும் பாதிக்கும் என்பதை மேட்டுக்குடிகள் அறிந்திருந்தார்கள். இந்நிலையிலேயே ஆட்சியதிகாரத்தை பிரித்தானியர்களிடமிருந்து தங்கள் கைகளுக்கு மாற்றிக் கொள்வதற்கு வசதியாகவே ஐ.தே.க உருவானது.

1919ஆம் ஆண்டு, இலங்கைக்கான முதலாவது அரசியல் குழுமமாக இலங்கை தேசிய காங்கிரஸ் உருவானது. இதன் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவர் பொன். அருணாச்சலம். அவரே, இதன் முதல் தலைவராகவும் இருந்தார். முற்போக்கான சிந்தனை கொண்ட இவர், அனைத்து இன மக்களுக்கான ஓர் அமைப்பாக இலங்கை தேசிய காங்கிரஸை வளர்த்தெடுக்க விரும்பினார்.

இதன் உருவாக்கத்தை மிகுந்த அச்சத்துடன் நோக்கிய ஆளுநர் வில்லியம் மனிங், பிரித்தாளும் தந்திரத்தின் ஒரு பகுதியாக, அரசியலமைப்புத் திருத்தத்தில் பிரதிநிதித்துவத்தை இனத்துவ அடிப்படையில் முன்மொழிந்தார். கண்டிய சிங்களவர்களில் ஒரு பகுதியினரும் தமிழரில் ஒரு பகுதியனரும் இதை விரும்பினர். ஆனால், இதை அருணாச்சலம் விரும்பவில்லை; ஆதலால் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், 1921ஆம் ஆண்டு தேர்தலில் அருணாச்சலம் தோற்கடிக்கப்பட்டார். இதை, சிங்கள - தமிழ் இனத்துவ முரண்பாட்டின் முதன்மையான தொடக்கப்புள்ளி என்று கொள்ளவியலும்.

தோல்வியைத் தொடர்ந்து, இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து அருணாச்சலம் விலகினார். இது, இலங்கை தேசிய காங்கிரஸின் முடிவின் தொடக்கமாயிற்று. இலங்கை தேசிய காங்கிரஸ், கொலனியாதிக்கவாதிகளுடன் பெயரளவிலேனும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர். இலங்கை தேசிய காங்கிரஸில் டி.எஸ். சேனாநாயக்க இருந்த போதும், அதில் முதன்மையான பாத்திரத்தை வகிக்கவில்லை. ஒருவேளை சுதந்திரம் கிடைத்தால், அதிகாரக் கைமாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகள், இலங்கை தேசிய காங்கிரஸ் உடனேயே நிகழும் என அவர் அஞ்சினார். இதனால், இதிலிருந்து வெளியேறி, புதிய கட்சியை உருவாக்கி, பிரித்தானியருடன் ஊடாட விரும்பினார்.

ஆனால், இலங்கை தேசிய காங்கிரஸுக்கு இருந்த செல்வாக்கு காரணமான, அவரால் அதைச் செய்ய முடியவில்லை. இந்நிலையில், இலங்கை தேசிய காங்கிரஸ் இதுவரைக் கோரி வந்த, 'இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து' என்ற நிலையில் இருந்து, பூரண சுதந்திரக் கோரிக்கையை முன்வைப்பது என்று முடிவுசெய்தது. இதை டி.எஸ் சேனாநாயக்க எதிர்த்தார்.

இதை எதிர்ப்பது, பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் தனக்கு நற்பெயரை உருவாக்கும் என அவர் அறிந்திருந்தார். ஆனால், இதை வெளிப்படையாக அறிவிக்காமல், இலங்கை தேசிய காங்கிரஸில் கம்யூனிஸ்டுகளை உள்ளீர்க்க முடிவு செய்யப்பட்டதை எதிர்த்து, தான் காங்கிரஸில் இருந்து விலகுவதாக 1943 டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி அறிவித்தார்.

இதன் தொடர்ச்சியாகவே, டி.எஸ். சேனாநாயக்க "சிங்கள மகா சபை' என்ற அமைப்பை வைத்திருந்த எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்க, முஸ்லிம் லீக் அமைப்பை வைத்திருந்த டி.பி. ஜெயா ஆகியோருடன் இணைந்து, 1946இல் ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கினார்.

அப்போது, டி.எஸ்ஸுக்கு அடுத்தபடியாக, கட்சியின் தலைமைப் பதவி தனக்கே என பண்டாரநாயக்க எதிர்பார்த்தார். காலப்போக்கில் கட்சியில் பதவிகள், சேனாநாயக்க குடும்பத்தாரைச் சுற்றியே இருப்பதை உணர்ந்து கொண்டார். ஐ.தே. கவில் பண்டாரநாயக்க சேரும்போது, சிங்கள மகா சபையைக் கலைக்கும்படி டி.எஸ் கேட்டிருந்தார். அதற்கு உடன்பட்டபோதும், அவர் அதைக் கலைக்கவில்லை. கட்சியில் தனக்கான இருப்பு கேள்விக்குறியாவதை உணர்ந்த நிலையில், சிங்கள மகா சபையை மீள ஒழுங்குபடுத்தத் தொடங்கினார்.

தனக்கு மறைமுகமான சவால் உருவாவதை அறிந்த டி.எஸ், இதைக் கையாளத் தனது மருமகனான ஜோன் கொத்தலாவலவை பயன்படுத்தினார். 1949ஆம் ஆண்டு ஒகஸ்ட் எட்டாம் திகதி இரவு, கட்சியின் செயற்குழுக் கூட்டம் அலரிமாளிகையில் டி.எஸ் தலைமையில் தொடங்கியது. அதில், நிகழ்ச்சி நிரலின் முதல் அம்சமாக, அன்று *'Times of Ceylon'* பத்திரிகையில் வெளியான செய்திக்குறிப்பு பற்றிய கவனத்தை கொத்தலாவல வேண்டினார்.

அச்செய்தியில், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதமாக, சிங்கள மகாசபைக் கூட்டத்தில் பண்டாரநாயக்க பேசினார் என்று குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக் காட்டினார். அன்றைய கூட்டத்துக்கு பண்டாரநாயக்க தாமதமாகவே வந்தார். குறித்த விடயம் விவாதிக்கப்படும் போது, அவர் அங்கிருக்கவில்லை. இவ்வாறு தொடங்கிய மோதல்கள், 1951ஆம் ஆண்டு ஜூலையில் பண்டாநாயக்கவின் வெளியேற்றத்துக்கு வழியமைத்தன.

இவ்வெளியேற்றம், கொத்தலாவலவை கட்சியின் இரண்டாவது நிலைக்குக் கொண்டுவந்தது. டி.எஸ்க்குப் பின்னர் அடுத்த தலைவராக, தனது மாமனைத் தொடர்வதற்கு தயாராக இருந்தார் ஜோன் கொத்தலாவல.

ஆனால், 1952இல் டி.எஸ்ஸின் மரணத்தைத் தொடர்ந்து அரங்கேறிய காட்சிகள், ஒரு திரைப்படத்தை ஒத்தவை. டி.எஸ் இறக்கும்போது, ஆளுநர் நாயகமாக இருந்த விஸ்கவுண்ட் சோல்பரி, இலங்கையில் இருக்கவில்லை. அவர் இலங்கையில் இருந்து புறப்பட்டபோது, பதில் கடமையாற்றும் அலன் ரோஸிடம் ஒரு செய்தியைத் தெரிவித்திருந்தார். "ஒருவேளை நான் திரும்புவதற்கிடையில் பிரதமர் பதவி வெற்றிடமானால், நான் திரும்பும்வரை எதுவித நடவடிக்கையும் நடைபெறக் கூடாது. பிரதமர், நான் இல்லாதவிடத்து அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை, டட்லி சேனாநாயக்கவிடம் ஒப்படைக்கச் சொல்லியிருக்கிறார்" என்பதுவே அச்செய்தியாகும்.

டி.எஸ்ஸின் மரணத்தைத் தொடர்ந்து அவசர கூட்டமொன்றைக் கூட்டி, குறித்த செய்தியை அலன் ரோஸ் தெரிவித்தார். இத்தகவலைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிடுவதாக அறிவித்தார். இச்செய்தியை, பத்திரிகைகளுக்கு அறிவிப்பதை கொத்தலாவல எதிர்த்தார். கட்சி இரண்டு அணிகளாகப் பிரிந்தது. அதைத் தொடர்ந்து நடந்தவை, இலங்கை அரசியல் வரலாற்றின் மறைக்கப்பட்ட சில முக்கியமான பக்கங்கள். இறுதியில் டி.எஸ்ஸின் நெருங்கிய நண்பரான ஆளுநர் நாயகம் சோல்பரி, ஆட்சியமைக்க டட்லியை அழைத்தார்.

1952ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வாராந்தப் பத்திரிகையான *Trine* தொடராக ஓர் ஆவணத்தை வெளியிட்டது. *'Premier Stakes* 1952' என்று தலைப்பிடப்பட்ட ஆவணம், இலங்கை அரசியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாவணம், டி.எஸ்ஸின் மறைவையொட்டி நிகழ்ந்த அதிகாரப் போட்டியை காலவரிசைப்படியும் முழுமையாகவும் பதிவிடுகிறது. தனக்குப் பின்னர், தனது மகனுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கு என்னென்ன திட்டங்களையெல்லாம் டி.எஸ். தீட்டியிருந்தார் போன்ற பல தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

தனது மாமாவால் வஞ்சிக்கப்பட்ட கொத்தலாவல, 1953இல் டட்லி பதவி விலகிய பின்னர் பிரதமரானார். கட்சியின் தலைமைப் பதவியும் இவருக்குக் கிடைத்தது. 1956இல் ஐ.தே.க தேர்தலில் தோல்வியடைந்தது. ஆனால், கொத்தலாவல தனது ஆசனத்தைப் பெற்றிருந்தார். அரசியலுக்கு மீண்ட டட்லிக்கு, கட்சியின் தலைமைப் பதவியைக் கொடுத்த கொத்தலாவல, அரசியலில் இருந்து ஒதுங்கி, பிரித்தானியா வில் உள்ள தனது பங்களாவுக்குச் சென்றுவிட்டார்.

1967இல் ஆளுநர் நாயகமாக இருந்த வில்லியம் கொபல்லவாவின் முதலாவது பதவிக்காலம் முடிந்த நிலையில், அப்பதவி தனக்கு கிடைக்கும் என எதிர்பார்த்து, கொத்தலாவல நாடு திரும்பினார், ஆனால், இரண்டாவது தடவையும் அப்பதவியில் கொபல்லவ தொடர டட்லி அனுமதித்தார். அதற்கொரு காரணமிருந்தது. இது, கொத்தலாவலவுக்கு மிகப்பெரிய ஏமாற்றமாகியது. ஆனால், இக்காலத்தில் 'அங்கிள்' அரசியல், ஐக்கிய தேசிய கட்சியை மட்டுமல்ல, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் தொற்றிக் கொண்டது.

## கடிதங்கள்

பல ஆண்டுகளாக

### நிறைவு பெறாத நொச்சிமோட்டை பால வேலை

வவுனியா - யாழ்ப்பாணம் ஏ9 வீதியில், பழுதடைந்திருக்கும் நொச்சிமோட்டை பாலத்தின் திருத்த வேலைகள் பல ஆண்டுகாலமாக நிறைவு செய்யப்படாமல் உள்ளதாக பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் நொச்சிமோட்டை பால அபிவிருத்தி பணிகள், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது. இதனால் ஏற்படும் அசௌகரியங்களால், யாழ், வீதியின் ஊடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த பால வேலையில் தினமும் இருவர் அல்லது மூன்று பேரே ஈடுபடுவதாலேயே குறித்த பாலத்தின் கட்டுமானப்பணி தாமதப்படுவதாகவும் வீதியில் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பால வேலையை விரைந்து முடிவுறுத்த வேண்டும் என பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

க. அகரன்





## New Anthoney's Farms: உக்கும்

# கோழி இறைச்சி பொதி அறிமுகம்

பிளாஸ்ரிக் கழிவுகளால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் New Anthoney's Farms (Private) Ltd, 100 சதவீதம் உக்கும் பொதியை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக, தமது உணவு பொதியிடல் செயன்முறையில் உக்கும் பொதியை அறிமுகம் செய்த முதலாவதும் ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராகத் திகழ்கின்றது.

புகழ்பெற்ற ஹரிதஹரி கோழி இறைச்சி தெரிவுகளுக்காக இந்த உக்கும் பொதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொதி உற்பத்தியில் கஞ்சிப்பசை, செலுலோசு, தாவர எண்ணெய், சீனி, கோரைப்புல் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை நுகர்வுக்கு பாதுகாப்பானதாகவும், விரைவில் உக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளன. பிளாஸ்ரிக் கழிவு மீள்சுழற்சி என்பன, குறுங்கால தீர்வுகளை மாத்திரம் வழங்குகின்றது என்பதால், சூழலுக்கு நட்பான மாற்றுப் பொதியிடலை நிறுவனம் இனங்கண்டிருந்தது.

நுகர்வோருக்கு மீள்சுழற்சி செய்து கொள்ளக்கூடிய அல்லது கொம்போஸ்ட் உரமாக மாற்றிக் கொள்ளக்கூடிய பொதிக்கான தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், New Anthoney's Farms இனால் நெகிழ்ச்சியான ஃபிலிம் மாதிரியை வடிவமைக்க முடிந்திருந்தது.

New Anthoney's Farms பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "எமது சகல பொதியிடல் தயாரிப்புகளையும் 100 சதவீதம் சூழலுக்கு நட்பான, உக்கக்கூடியவையாக மாற்றும் நடவடிக்கையானது நிறுவனத்தின் சூழலுக்கு நட்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அர்ப்பணிப்புக்கமைய அமைந்துள்ளது. எமது R&D பிரிவால் தொடர்ச்சியாக முன்னணி ஆய்வு நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் கல்விமான்களுடன் இணைந்து நிலைபேறான பொதியிடல் தீர்வுகளைத் தயாரிக்கும் வழிமுறைகள் இனங்காணப்பட்ட வண்ணமுள்ளன" என்றார்.

புள்ளி விவரங்களின் பிரகாரம், இலங்கையின் பிளாஸ்ரிக் நுகர்வு என்பது வருடாந்தம் 15 சதவீதத்தை விட அதிகமாக காணப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படும் ஆயிரக் கணக்கான பிளாஸ்ரிக் மூலப் பொருட்களில் 70 சதவீதம் உள்நாட்டு பாவனைக்கு பெறப்படுகின்றது. நாட்டின் சூழல் கட்டமைப்புக்கு மாபெரும் சவாலாக அமைந்துள்ள மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை கட்டாயமான தேவையாக அமைந்துள்ளது.

அண்மைய மாதங்களில், பொறுப்பு வாய்ந்த பிளாஸ்ரிக் கழிவகற்றல் செயன்முறை தொடர்பில் நாட்டினால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, உற்பத்தியாளர்களும் தயாரிப்பாளர்களும் தற்போது மீளப் பயன்படுத்தக்கூடிய, மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய அல்லது கொம்போஸ்ட் ஆகக்கூடிய பொதியிடல் முறைகளை பின்பற்ற தம்மை அர்ப்பணித்த வண்ணமுள்ளன. கோழி இறைச்சி உற்பத்தித் துறையில் இந்த வழிமுறையை பின்பற்றுவதையிட்டு New Anthoney's Farms மிகவும் பெருமை கொள்கின்றது.

நெதர்லாந்தைச் சேர்ந்த Control Union இனால் Greenhouse Gas (GHG) உறுதிப்படுத்தல் அறிக்கைக்கமைய இலங்கையைச் சேர்ந்த ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராக இந்நிறுவனம் திகழ்வதுடன், ISO 14064-1:2018 நியமங்களுக்கமைய உற்பத்திப் பணிகளையும் முன்னெடுக்கின்றது. New Anthoney's Farms இனால் தொடர்ச்சியாக பரந்தளவு சூழல் பாதுகாப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## மாத்தறையில் ருஹுனு ஹொஸ்பிட்டல் திறப்பு



ருஹுனு ஹொஸ்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டெட் தனது மாத்தறையில் அதன் சமீபத்திய மருத்துவ நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற திறப்பு விழா வைபவத்தில், இவ்வைத்திய நிலையம் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபைத் தலைவர் தீபால் விக்கிரமசிங்க, இணைத் தலைமை நிர்வாக அதிகாரிகளான ரவீன் விக்கிரமசிங்க, ஜனித் லியனகே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

அதிநவீன வசதிகள் கொண்ட இந்த உயரிய மருத்துவ மையம் உயன்வத்தையில், மக்கள் மிகவும் எளிதில் சென்று வரக்கூடிய வகையில் சௌகரியமான இடத்தில் அமைந்துள்ளது.

அண்மைக் காலங்களில் மாத்தறையில் உள்ள நோயாளர்களால் தமக்கு உயரிய சுகாதார சேவைகள் தேவையாகவுள்ளன என பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. நோயாளர்கள் இந்த மருத்துவ நிலையத்தில் பலவிதமான மருத்துவ சேவைகளைப் பெறலாம்.

இங்கு வைத்தியரைச் சந்தித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பத்து அறைகள், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே, Ruhunu Hospital Diagnostic (மருத்துவ ஆய்வுகூடம்), பார்மசி, Echocardiogram, Ultrasound Scan, PCR, Rapid Antigen சோதனை போன்ற பல்வேறு சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன.

அனைத்து நோயாளர்களுக்கும் உயரிய தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதில் சிறந்து விளங்க வேண்டும் என்ற ருஹூனு ஹொஸ்பிட்டல்ஸின் அர்ப்பணிப்பின் நெறிமுறைகளை இந்த மருத்துவ சிகிச்சை வசதி பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

மருத்துவ மையத்தில் மிகவும் திறமையான மற்றும் தொழில்முறை ஆளணி பணியமர்த்தப்பட்டு, மிக உயர்ந்த தரமான சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை, உயன்வத்தையில் உள்ள புதிய மையத்தில் வைத்தியரைச் சந்தித்து மருத்துவ சிகிச்சை ஆலோசனை பெறுதல், MRI ஸ்கேன், catheterization ஆய்வுகூடம் போன்று கராப்பிட்டியில் உள்ள ருஹூனு ஹொஸ்பிட்டல் வழங்கும் சேவைகளுக்கும் நோயாளர்கள் முன்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

ருஹூனு ஹொஸ்பிட்டல்ஸின் மாத்தறை மருத்துவ நிலையத்தை ஆரம்பித்து வைப்பது தொடர்பில் கருத்து தெரிவித்த இணைத் தலைமை நிர்வாக அதிகாரியான ரவீன் விக்கிரமசிங்க, "மாத்தறை வாசிகளின் அதிகரித்து வரும் மருத்துவத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த சிகிச்சை வசதியை நாங்கள் திறந்துள்ளோம். தென் மாகாணத்திற்கு சிறந்த மருத்துவ சுகாதார சேவையை வழங்குவதில் ருஹூனு வைத்தியசாலையின் 26 வருட கால களங்கமற்ற சாதனையுடன், மாத்தறையிலுள்ள நோயாளர்கள், அவர்களது குடும்பங்களின் தேவைகளுக்கு சேவை செய்ய நாங்கள் நன்கு தயாராக உள்ளோம். இந்தப் புதிய முயற்சியை, 2022 ஆம் ஆண்டில் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் நீண்ட கால அடிப்படையில் இதனை 100 படுக்கையறைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்தவும் எதிர்பார்த்துள்ளோம். கராப்பிட்டியை மையமாகக் கொண்டு, தென் மாகாணத்தின் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் எமது சேவைகளை விரிவுபடுத்துகிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

சென்னை

# தேர்தலில் பா.ஜனதா சார்பில் திருநங்கை போட்டி



சென்னை மாநகராட்சி 76 ஆவது வட்டார வேட்பாளராக திருநங்கை ராஜா என்கிற ரதி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவர் பா.ஜனதா கட்சியில் வடசென்னை மாவட்ட கலை கலாசார பிரிவு துணைத் தலைவராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்துத் தெரிவித்த ரதி, "நான் கடந்த 10 ஆண்டாக பா.ஜ.கவில் உள்ளேன். தற்போது, வடசென்னையில் போட்டியிடுவோர் சம்பாதிப்பதில் மட்டுமே குறியாக இருக்கின்றனர். மத்திய, மாநில அரசுகள் வழங்கும் நிதி, இப்பகுதி மக்களுக்கு முறையாக பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. நான் வெற்றி பெற்று அரசுகள் வழங்கும் திட்டங்கள், எங்கள் பகுதி மக்களுக்கு முறையாகச் சென்று சேர துணை நிற்பேன்" எனத் தெரிவித்துள்ளார்.



புதுடெல்லி

## இந்தத் தோசையை உண்டால்

# ரூ. 1.92 இலட்சம் பரிசு

புதுடெல்லியில் உள்ள பிரபல உணவகமொன்று, தோசையை வைத்து சுவாரசியமான போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது.

10 அடி நீளமுள்ள இத் தோசையை 40 நிமிடத்துக்குள் முழுமையாக உண்டு முடித்து விடவேண்டுமெனவும், அவ்வாறு உண்டு முடித்தால் இந்திய மதிப்பில் 71,000 ரூபாய் (இலங்கை மதிப்பில் 1,92,752 ரூபாய்) பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

இப் போட்டியில் வெல்வது என்பது இலகுவான விடயம் இல்லையெனவும், போட்டியாளர் முழு தோசையையும் சாப்பிடவில்லை என்றால் தோசையின் விலையான 1,500 ரூபாயை கொடுத்துவிட வேண்டும் என உணவக உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த போட்டியில் கலந்து கொண்ட பலரும் தமது அனுபவங்களை சமூக வலைதள பக்கங்களில் வீடியோக்களாக பதிவிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கர்நாடகா

## கைகளால் கண்ணை பிடுங்கிய முதியவர்

முதியவர் ஒருவர் தனது கண்ணையே பிடுங்கி எறிந்த சம்பவம் கர்நாடகாவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கர்நாடக மாநிலம் பத்ராவதியை சேர்ந்த குறித்த முதியவர், சம்பவ தினத்தன்று தனது கண்ணில் அட்டை புகுந்து விட்டது என்று எண்ணி, தனது கைகளாலே ஒரு கண்ணைப் பிடுங்கி எறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனது பேரனை அழைத்து, அவனிடம் நடந்தவற்றைக் கூறி, கீழே விழுந்து கிடந்த கண்ணை நசுக்கும் படி கூறியதாகவும், பேரனும் அவ்வாறே செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு வந்த முதியவரின் மகன், தனது தந்தையின் செயலைக் கண்டு அதிர்ச்சியடைந்தாகவும், பின்னர் அவரை அழைத்துக் கொண்டு வைத்தியசாலை சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி

## ஜல்லிக்கட்டுக்கு ஹெலியில் வந்த நபர்




ஜல்லிக்கட்டை பார்ப்பதற்காக கர்நாடக மாநிலம் பெங்களூரில் வசிக்கும், தர்மபுரி மாவட்டம் பொம்ம அள்ளி கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் ஹெலிகொப்டரில் வந்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல தொழில் அதிபரான பாபு என்பவரே நேற்று முன்தினம் (02) தர்மபுரியில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியை பார்வையிடுவதற்காக தனது குடும்பத்தினருடன் ஹெலிகொப்டரில் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த ஜல்லிக்கட்டு போட்டி நடந்த மைதானத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த இறங்கு தளத்தில் (ஹெலிபேட்) அந்த ஹெலிகொப்டர் தரை இறங்கியதாகவும், அப்போது ஜல்லிக்கட்டுக்கு வந்த பொதுமக்கள் அந்த ஹெலிகொப்டரை சுற்றி நின்று புகைப்படங்கள் எடுத்து மகிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம்

## தேசிய கீதத்தை அவமதித்த முதலமைச்சர்?



மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கடந்த ஆண்டு மும்பைக்கு வந்தபோது தேசிய கீதத்தை அவமதித்ததாக பா.ஜ.க நிர்வாகி விவேகானந்த் குப்தா, பெருநகர நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

மேலும், தேசிய கீதத்தை அவமதித்த மம்தா மீது வழக்கு (எப்ஐஆர்) பதிவு செய்ய உத்தரவிடவேண்டும் எனவும், தேசிய கீதம் இசைக்கப்படும்போதோ அல்லது பாடப்படும்போதோ பார்வையாளர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்ற மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவை, மம்தா பானர்ஜி மீறியதாகவும் குப்தா தனது மனுவில் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்நிலையில் இவ்வழக்கானது நேற்று (03) தினம் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றம் மார்ச் 2ஆம் திகதி மம்தா பானர்ஜியை நேரில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல்

## வைரலாகும் ஒட்டகப்பால் தேநீர்





திண்டுக்கல்லில் விற்பனை செய்யப்படும் ஒட்டகப்பால் தேநீரானது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

திண்டுக்கல் - மதுரை 4 வழிச்சாலையில் சையது இப்ராஹிம்ஷா என்பவரே குறித்த தேநீர் கடையை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ராஜஸ்தானில் இருந்து ஒட்டகப்பாலை கொள்வனவு செய்வதாகவும், ஒட்டகப்பால் தேநீரை 65 ரூபாய்க்கு விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடையின் உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், தமிழகத்தில் கோவை, திருப்பூர் போன்ற ஒரு சில நகரங்களில் ஒட்டகப்பாலில் டீ விற்பனை செய்யப்படுகிறது. திண்டுக்கல்லில் முதன் முறையாக ஒட்டகப்பாலில் தேநீர் விற்பனை செய்து வருகிறேன்.

இது புரதச்சத்து, கலோரின் ஆகிய சத்துகளை கொண்டது. தாய்ப்பாலை விடச் சிறந்ததாக கருதப்படுகிறது. மேலும் ஆண்மை விருத்திக்கு உதவும் என்பதால் பெரும்பாலான ஆண்கள் இதனை வாங்கிப் பருகி வருகின்றனர். தற்போது திண்டுக்கல் நகரில் ஒட்டகப்பாலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது" என்றார்.

கொங்கோ

அகதிகள் முகாமில் பயங்கரவாத தாக்குதல்

# 60 பேர் மரணம்



அகதிகள் முகாமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்த சோக சம்பவம் கொங்கோவில் இடம்பெற்றுள்ளது.

கொங்கோவின் இடூரி மாகாணத்தில், நேற்று முன்தினம் (02) அகதிகள் தங்கியிருந்த முகாமை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமெனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கோட்கோ என்ற பயங்கரவாத அமைப்பினர் இத் தாக்குதலை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நைஜீரியா

# சொந்த ஜெட்டில் உலாவரும் சிறுவன்



நைஜீரியாவைச் சேர்ந்த ஒன்பது வயதான சிறுவனொருவன், இளைய கோடிஸ்வரர் என்ற புகழைப் பெற்று இணையத்தில் வைரலாகி வருகிறார்.

நைஜீரியாவைச் சேர்ந்த முஹமது அவல் முஸ்தபா எனும் சிறுவன் இவ்வாறு ஆடம்பர மாளிகை, விலை உயர்ந்த சொகுசு கார்கள், தனி ஜெட் விமானம் என கோடீஸ்வர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்.

இணைய பிரபலமான இஸ்மாலியா முஸ்தபாவின் மகனான குறித்த சிறுவனின் பெயர், முஹமது அவல் முஸ்தபா என தெரியவந்துள்ளது. இவர் 'மொம்பா ஜூனியர்' எனவும் அழைக்கப்படுகிறார்.

இவர், தனது இன்ஸ்டாகிராமில் வெறும் ஒன்பது பதிவுகளுடன் 25,000க்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ளார். பொதுவாக 'மொம்பா ஜூனியர்' வழக்கமாக தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படங்களைப் பகிர்ந்து, அவரது ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் காட்டுவார். குறித்த படங்களைப் பார்ப்பதற்காகவே ஏராளமான மக்கள் அவரைப் பின்தொடர்கின்றனர்.

ஆர்ஜென்டினா



# போதைப்பொருளை பயன்படுத்திய 20 பேர் மரணம்

கலப்படம் செய்யப்பட்ட போதைப்பொருளைப் பயன்படுத்திய 20 பேர் உயிரிழந்த சம்பவம் ஆர்ஜன்டினாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியள்ளது.

ஆர்ஜென்டினாவில் அண்மைக்காலமாக போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் அந்நாட்டின் எட்டு மாகாணங்களில் கலப்படம் செய்யப்பட்ட கொகைன் போதைப்பொருளை பயன்படுத்தியதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதாகவும் மேலும் 74 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து போதைப்பொருள் விற்பனை செய்ததாக சந்தேகித்த ஒரு கும்பலை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோகைனில் கலக்கப்பட்ட பொருள் என்னவென்று இன்னும் தெரியாததால், இறப்புகளைத் தடுக்க அவசர சேவைகள் மற்றும் மருத்துவமனைகளுடன் இணைந்து, பாதுகாப்பு அமைச்சகம் பணியாற்றி வருகிறது.

மேலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோர் தொடர்ந்து இறந்து வருவதால், சமீபத்தில் வாங்கிய எந்தப் போதைப் பொருட்களையும் பயன்படுத்த வேண்டாமென்று அந்நாட்டு அரசு அறிவுறுத்தி உள்ளது.

பிற கும்பலுடனான போட்டியின் காரணமாக, கொகைனில் சில பொருட்களை கலந்து, அது நச்சுத்தன்மை கொண்டதாக மாறியிருக்கலாம் எனக் கூறப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# வீழ்ச்சியை சந்திக்கும் பேஸ்புக்



உலகின் முன்னணி சமூக வலைதளமான பேஸ்புக்கின் தினசரி பயனர்களின் எண்ணிக்கை 18 ஆண்டுகளில் இல்லாத அளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேஸ்புக்கின் தாய் நிறுவனமான 'மெட்டா' கூறியதாவது:

பேஸ்புக்கின் தினசரி பயனர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று மாதங்களில் 193 கோடியில் இருந்து 192.9 கோடியாக குறைந்துள்ளது. இதற்கு டிக்டொக், யூடியூப் போன்ற சமூக வலைதளங்களுடனான போட்டியே காரணம்.

மேலும் விளம்பரதாரர்களும் பேஸ்புக்கில் விளம்பரம் செய்வதற்காக செலவிடும் தொகையை குறைத்துள்ளனர்.

நியூயோர்க் பங்குச்சந்தையில் 'மெட்டா' நிறுவனத்தின் பங்குகள் 20 சதவீதம் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.


'மெட்டா' மட்டும் இல்லாமல் ட்விட்டர், ஸ்னாப்சேட், பின்ட்ரஸ்ட் போன்ற சமூக வலைதளங்களின் பங்கு மதிப்பும் குறைந்துள்ளன. இதற்கு காரணம், இளைய தலைமுறையை சேர்ந்த பயனர்கள் போட்டியாளர்களின் தளங்களை பயன்படுத்துவதே ஆகும்.

மேலும், அப்பிள் நிறுவனம் அதன் ஐஓஎஸ்சில் அமல்படுத்தியுள்ள தனிநபர் உரிமைகளின் மாற்றம், விளம்பர நிறுவனங்கள் பேஸ்புக், இன்ஸ்டாகிராமில் உள்ள பயன்பாட்டாளர்களை அளவிடுவதை கடினமாக்கியுள்ளது. இதுவே 1,000 கோடி டொலர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது" என 'மெட்டா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியா

முகக் கவசத்தைக் கழட்டியதால்

# ரூ. 5.42 இலட்சம் அபராதம்



முகக் கவசத்தை கழட்டியதால் நபரொருவருக்கு 2,000 பவுன்ஸ் (இலங்கை மதிப்பில் 5,42,420 ரூபாய்) அபராதமாக விதிக்கப்பட்ட சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரம் அடைந்து வருவதால் அங்கு கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், கிறிஸ்டோபர் என்ற நபர் முகக்கவசம் அணிந்து கொண்டு கடையொன்றுக்குச் சென்றுள்ளதாகவும், அங்கு முகக்கவசத்தை, கழற்றி மாற்றியுள்ளதாகவும், இதன் போது அங்கு வந்த பொலிஸார், அவர் முகக் கவசம் இல்லாமல் இருப்பதைப் பார்த்து, அவருக்கு 2,000 பவுன்ஸை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடாமுயற்சியால்

# டுபாயில் நடைபெறும் குத்துச்சண்டையில் புதுக்குடியிருப்பு யுவதி

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருந்து, யுவதி ஒருவர் டுபாயில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள (Golden G Sports Association )குத்துச்சண்டை போட்டிக்குச் செல்கின்றார்.

01 ஆம் வட்டாரம் மருதமடுவீதி கைவேலி புதுக்குடியிருப்பில் வசிக்கும் யோகராசா நிதர்சனா, தந்தை இல்லாத நிலையில் மிகவும் வறுமைக்குட்பட்ட குடும்பத்தில் வாழ்ந்துவரும் இவர், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவியாக தற்போது காணப்பட்டாலும் 2015ஆம் ஆண்டு தொடக்கம் குத்துச்சண்டையில் ஆர்வம் கொண்டு குத்துச்சண்டை பயிற்சிகளை பெற்று போட்டிகளில் பங்கெடுத்து பதக்கங்களை வென்றுள்ளார்.

2015 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற குத்துச்சண்டை தேசிய போட்டியில் சிறந்த குத்துச்சண்டை வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டு தங்க பதக்கத்தை வென்றுள்ளதுடன் 48 தொடக்கம் 50 கிலோ கிராம் எடைகொண்ட போட்டிகளில் கடந்த 5 ஆண்டுகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்டு தங்கப்பதக்கங்களை வென்ற இவர், சர்வதேச தெரிவு 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் சிறப்பாக விளையாடியும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பெரும்பான்மை இன பெண்ணிற்கே வெற்றி கிடைத்தது.



இந்நிலையில், கருத்துத் தெரிவித்த நிதர்சனா, "இதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள நேபாளத்தில் நடைபெறவுள்ள சர்வதேச விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ளவேண்டும் என்ற இலட்சியத்துடன் பயணிக்கின்றேன்.

எம்.ஏ.எஸ் குத்துச்சண்டை பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்று வந்தேன். கொரோனா காரணமாக, நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் குத்துச்சண்டைக்கான சரியான பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத நிலையில், தற்போது நான் வவுனியாவிற்கு சென்று பயிற்சிகளையே மேற்கொண்டுவருகின்றேன். வீட்டில் கூட குத்துச்சண்டைக்குரிய பொருட்கள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றேன்.

என்னைப்போன்ற பல யுவதிகள் திறமைகளுடன் இருந்தும் அவர்கள் கஸ்டத்தின் மத்தியில் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரமுடியாத நிலை காணப்படுகின்றது. நானும் கஷ்டப்பட்ட ஒரு யுவதிதான். தாய்த்தமிழ் பேரவையின் உதவியால் டுபாய்க்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது" என்று கூறியுள்ளார்.

சர்வதேச ஓய்வை அறிவித்து

# டெர்பஷையரில் இணைந்த லக்மால்



இந்தியாவுக்கான இலங்கை சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து அனைத்து வகையான சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்த இலங்கையணியின் முன்னாள் தலைவரான சுரங்க லக்மால், இங்கிலாந்துக் கவுண்டி அணியான டெர்பஷையருடன் இரண்டாண்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

34 வயதான லக்மால், 68 டெஸ்ட்களில் விளையாடி 168 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, 86 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 109 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, 11 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

# தவான், ஐயருக்கு கொரோனா வைரஸ் தொற்று



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கு முன்பதாக இந்திய முகாமில் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

வீரர்களில் ஷீகர் தவான், ஷ்ரேயாஸ் ஐயர், ருத்துராஜ் கைகவாட்டுக்கும் மேலதிக வேகப்பந்துவீச்சாளர் நவ்தீப் சைனிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஏனையோரில் களத்தடுப்புப் பயிற்சியாளர் டி. டிலிப், பாதுகாப்பு அதிகாரி பி. லோகேஷ், பௌதிகவியல் நிபுணர் ரஜீவ் குமாருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் மாயங்க் அகர்வால் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, தனது சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்வதன் காரணமாக முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியை லோகேஷ் ராகுல் தவறவிடுகின்ற நிலையில், அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, சூரியகுமார் யாதவ், றிஷப் பண்ட், தீபக் ஹூடா ஆகியோர் மாத்திரமே துடுப்பாட்டவீரர்களாகக் காணப்படுகின்றனர்.

மருதம் விளையாட்டுக் கழகத்துக்கு

# ஷிபானால் விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு



■ எம்.என்.எம். அப்ராஸ், நூருல் ஹுதா உமர், றாஸிக் நபாயிஸ்

கல்முனை மாநகர சபையால் வழங்கப்படும் சம்பளத்தைக் கொண்டு 'மாதம் ஒரு வேலைத்திட்டம்' எனும் நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்து அதன் பிரகாரம் தனது இறுதி சம்பளத்தை மருதம் விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் சப்பாத்துகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பீ.எம். ஷிபானால் வழங்கி வைக்கப்பட்டது.

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழகத்திற்கு தேவையாக இருந்து வந்த விளையாட்டு உபகரணங்களையும் சப்பாத்துகளையும் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பேரில் இம்மாத சம்பளத்தில் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்திருந்தமையை நிறைவேற்றி வைத்தமை மகிழ்ச்சியளிப்பதாக இங்கு கருத்து வெளியிட்ட மருதம் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

**" எனக்கு வாக்களித்த எனது வட்டார மக்கள் எந்தத் தேவையும் இன்றி எனக்காக வாக்களித்தவர்கள். அவர்கள் எனக்கு வாக்களிப்பதற்காக பணமோ பொருளோ என்னிடம் கேட்டதுமில்லை. நான் கொடுத்ததும் இல்லை**

அண்மையில், தனது இல்லத்தில் வைத்து மருதம் விளையாட்டுக்கழக நிர்வாகத்தனரிடம் விளையாட்டு உபகரணங்களை கையளித்து, உரையாற்றிய ஷிபான், "எனக்கு வாக்களித்த எனது வட்டார மக்கள் எந்தத் தேவையும் இன்றி எனக்காக வாக்களித்தவர்கள். அவர்கள் எனக்கு வாக்களிப்பதற்காக பணமோ பொருளோ என்னிடம் கேட்டதுமில்லை. நான் கொடுத்ததும் இல்லை. சேவை நோக்கம் கருதி வாக்களித்த மக்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு எமது பிரதேசத்தில் பொதுப்படையான தேவைகளை இனங்கண்டு செயலாற்ற வேண்டிய கடமைப்பாடு எனக்கு உள்ளது. எதிர்வரும் காலங்களிலும் பல வேலைத்திட்டங்களை செய்ய காத்திருக்கிறேன்" என்றார்.



## ஐயப்பாடுகள் களையப்பட்டு, நம்பிக்கைகள் துளிர்க்கட்டும்

# சுதந்திர தினத்தின் மகத்துவம் அர்த்தப்படும் புரிதல்

நளீர் அஹமட்

இத்தேசம், 15 ஆம் நூற்றாட்டின் இறுதிக் காலப்பகுதியிலிருந்து 450 வருடங்களுக்கு மேற்பட்ட காலம், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என அந்நியரின் ஆதிக்க ஆட்சியின் கீழ் இருந்தது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி, அந்நிய ஆதிக்க ஆட்சியலிருந்து சுதந்திரம் பெற்றது.

இறுதியாக, 150 வருட பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, ஓர் ஆசிய வலய நாடு என்ற வகையில், அப்போது சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்திருந்த அரசியல் கட்சி முறை, பாராளுமன்ற ஆட்சிமுறை, அரசியல் யாப்பு என்பனவற்றின் மூலம் சுதந்திரமான அரசென்றை நோக்கி முன் செல்வதற்கு முடிந்தது.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதென பிரித்தானியா முடிவெடுத்ததை அடுத்து, 1947ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அன்றைய பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவுடன் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாதிடப்பட்டன.

முதலாவது, பாதுகாப்பு ஒப்பந்தம். இதன்படி, திருகோணமலை கடற்படை முகாமிலும் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் பிரித்தானியப் படைகளை வைத்திருப்பதற்கு இலங்கை இணங்க வேண்டும்.

இரண்டாவது, வெளிவிவகார ஒப்பந்தம். இதன்படி, பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போது, பிரித்தானிய விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது, அரச ஊழியர்கள் தொடர்பான ஒப்பந்தம். இதன்படி, இலங்கையில் தொடர்ந்தும் கடமையாற்றும் பிரித்தானிய ஊழியர்களுக்கு ஓய்வூதியம், ஊழியர் சேமநல நிதி என்பவற்றைத் தொடர்ச்சியாக வழங்க, இலங்கை சம்மதிக்க வேண்டும் என்பனவாகும். இதன் பிரகாரமே இலங்கை சுதந்திர சட்டம் அமலுக்கு வந்தது.

இலங்கை சுதந்திர சட்டம் இவ்வாறு கிடைத்தாலும், 1947- 1972 வரை சோல்பரி அரசியல் யாப்பே நடைமுறையில் இருந்துள்ளது. இதன் பிரகாரம், இலங்கை சுயாதீன முழுமையான சுதந்திரத்தைப் பெற்றிருக்கவில்லை.

இலங்கையில் பிரிதித்தானிய முடியே தொடர்ந்தும் செயற்பட்டமையும் ஆட்சி நடவடிக்கைகளில் பிரித்தானியாவின் தலையீடு இருந்ததாகவும், அதாவது சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை போன்ற மூன்று முக்கிய துறைகளிலும் பிரித்தானியாவின் செல்வாக்கு கானப்பட்டது.

இவைகளைக் கடந்து, தன்னாதிக்கம் கொண்ட சுதந்திர யாப்பொன்றின் தேவை பற்றி, அன்றைய தலைவர்களினது விழிப்பால், 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

கம்யூனிஸ, சோசலிஸ, தாராண்மைவாதிகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பில் தமிழரசுக் கட்சியின் சிபாரிசுகள் புறக்கணிக்கப்பட்டன. தமிழ்ச் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளை, அரசியலமைப்பு சபை புறக்கணித்தது. சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்ட அரசியலமைப்பாக அது இருந்தது. அன்றைய ஆட்சியின் தன்னிச்சையான யாப்பாகவே அது இருந்தது. கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள் கூட, சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கிகரிக்காதது துரதிர்ஷ்டமே!

அதன்பின்னர், 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பில் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என்பன இருந்தாலும், அதிகாரப்பகிர்வு கைகூடவில்லை. இதிலும்கூட, அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிபாரிசுகள் புறக்கணிக்கப்பட்ட அரசியலமைப்பாகவே இருந்தது. அன்று தொடக்கம் இன்று வரை, இந்த அரசியலமைப்பின் குறைபாடுகளும் சிலபோது அரசியலமைப்பிலுள்ள விடயப் பரப்புகளை, இந்நாட்டின் பெரும்பான்மை சமூகத்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களால் வெறும் அரசியல் நோக்கங்களுக்காக முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் போனதால் ஏற்பட்ட அரசியல், சமூக விபரீதங்களை நன்குணர்ந்து வைத்திருக்கிறோம்.

அதுபோக, யுத்த வெற்றிக்கு அப்பாலும் இந்நாட்டில் மிகக் குறுகிய கால இடைவெளியில், இந்நாட்டில் ஏற்பட்ட பிறிதோர் அச்சம் இன்னும் தொடர்கிறது. புதிய அரசியலமைப்பாக்கம். அதுவெறும் அச்சம் அல்ல; இந்நாட்டில் சிறுபான்மை சமூகங்களின் இருப்புக்கான கேள்விகளை விட்டுச் செல்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தற்போதைய ஜனாதிபதி, தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குப் புறம்பாக சட்டத்தரணிகளைக் கொண்ட குழுவொன்றை நியமித்து இருப்பது, பல கலந்துரையாடல்களுக்கு வழிவகுத்துள்ளது. திஸ்ஸ விதாரன போன்றவர்கள் வெளிப்படையாகவே நிலைபேறான அடைவுகளை சாத்தியப்படுத்தாது என்று கூறுகிறார்.

அதேபோல, தமிழரசுக் கட்சியினருடன் கலந்துரையாடலுக்கான வாய்ப்பை ஏலவே வழங்கிய ஜனாதிபதி, காலவரையரையின்றி ஒத்திவைத்ததுடன், இன்றுவரை சந்தர்ப்பம் வழங்காது இருப்பதன் விளைவு, 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துமாறு கோரி, இந்திய பிரதமருக்கு கடிதம் சமர்ப்பிக்குமளவும் இந்தியாவின் சிறப்பு பிரதிநிதியொருவரைக் கோரும் நிலை வரையும் நீண்டு சென்றுள்ளது. இந்த நம்பிக்கையீனங்கள் முதலில் களையப்பட வேண்டும்.

நாட்டின் சிறுபான்மை சமூகமொன்றின் உள்ளக சமவாய்ப்புக்கான பரப்புகளை, பிறர் தலையீட்டில் தேட வேண்டிய நிலை, சுதந்திர இலங்கையில் 74 வருடங்கள் நீட்சியாகத் தொடர்கிறது. ஐயப்பாடுகள் களையப்பட்டு, நம்பிக்கைகள் துளிர் விடும் நிலைபோறான அடைவுகளை சாத்தியப்படுத்தும் சுதந்திர வருடமாக இந்த வருடம் அமையட்டும்.

2019இல் இடம்பெற்ற அரசியலமைப்பு மீறல்கள் கூட, ஒரு சாதாரண விடயமாகப் பார்க்கப்படுகிறது. எந்தவித கேள்விகளுக்கும் அவதானிப்புகளுக்கும், குற்றம் சார்ந்த விடயப் பரப்புக்குள்ளாலும் உள்வாங்கப்படாத விடயமாக தொடர்கிறது. இவை தொடர்பாக, இந்நாட்டிலுள்ள ஜனநாயக சமூகம் சிந்திக்க வேண்டும்.

பன்மைச் சமூகத்தின் இயல்பை உள்வாங்காத, பௌத்த சமூகத்தின் மூடிய தேசிய விழிப்புணர்வு அல்லது குறுகிய தேசிய உணர்வு, இந்நாட்டுக்கு மிக ஆபத்தான விடயங்களாகும். இதில், மிக கவலையளிக்கும் விடயம், இந்நாட்டிலுள்ள சக்தி வாய்ந்த பௌத்த பிரிவனாக்கள், சங்கைக்குரிய தலைமை தேரர்கள் மௌனமாக இருப்பதும் கலந்துரையாடல்களுக்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தாமலிருப்பதும் அரசியல் ரீதியாக உணர்வுவயப்பட்டு, நிலைமைகளை அங்கிகரிப்பதும் துரதிர்ஷ்டவசமான விடயங்களாகும். இந்த மனோபாவத்திலிருந்து விடுபட வேண்டும். இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றினைந்து, பன்மைத்துவத்தை அங்கிகரித்து, புரிதலினூடாக, ஒருமித்த தேசிய உணர்வை வெளிப்படுத்தாத போது, இந்நாடு முன்னேறுவது பற்றி சிந்திப்பதும் கொள்கைவகுப்பதும் பயனளிக்காத செயல்களாகும்.

பிரஜைகள் தங்களின் முயற்சியாண்மைகளை இந்நாட்டுக்கு வழங்க வேண்டும். சிறுபான்மை சமூகங்களிலிருந்து கட்டமைக்கபட்ட இனவாத செயற்பாடுகள் இலங்கையில் குறைவு. சிறுபான்மை சமூகங்கள், முற்றாக இதிலிருந்து தூர விலகி இருக்க வேண்டும். அவ்வாறு எதும் நடக்கும் பட்சத்தில், இந்நாட்டின் நீதிக்கு முன்நிறுத்தப்பட வேண்டும்.

தற்போது, ஆயுத போராட்ட தோல்வியின் பின்னர், தமிழ் சமூகமும் ஜனநாயக பங்கேற்பை நோக்கியே திரும்பியிருக்கிறது. அதிலிருந்து அவர்களைத் தூரமொதுக்க முடியாது. இதைப் பௌத்த சமூகம், சரியாக விளங்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதைப் புரிந்து கொண்டாலே சுதந்திர தினத்தின் மகத்துவம் அர்த்தப்படும்.

இலங்கையின் தேசியவாதம், அந்நிய ஆட்சிக்கு எதிரான போராட்ட வாசகமாகவே சுதந்திரத்துக்கு முன்னிருந்தது. இன்று, ஏதோ ஒரு வடிவில், உள்ளக ரீதியான சுதந்திரம் பற்றிப் பேசுகிறோம். உள்ளக யுத்தம், கிளர்ச்சிகள் இன்றியே பயங்கரவாத தடை சட்டம், நீண்ட நாள்களாக அமலில் உள்ளது. இது வெகுஜன பங்கேற்புக்கான சந்தர்ப்பங்களைக் குறைக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகளும் ஆளுமைகளும் உள்ளக இனவாத மேலோங்குகைகளைத் தணித்து, சுதந்திரப் போராட்டத்தில் பன்மை சமூகத்தை இணைத்துக் கொண்டு வெற்றி கண்டது. துரதிர்ஷ்டவசமாக, சுயநல அரசியல் நோக்கங்களுக்காகவும் அதிகார அரசியலுக்காகவும் இன்றுள்ள அதே கொள்கைகளைக் கொண்ட இடதுசாரிக்காரர்கள், உள்ளக இனவாத செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் இருப்பதும் இனவாத அழுக்க குழுக்களுடன் தொடர்புகளை வெளிப்படையாக வைத்திருப்பதும் நாட்டின் நலனை பாதிக்கும், மிகக் கீழ் தரமான அரசியலாகும்.

நாட்டின் மக்கள் சார்ந்து, சமூகக் கொள்கை சார்ந்து, அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தாமல், ஒருவகை தனித்த முடிவுகளை நடைமுறைப்படுத்தி வருவதால், பல பிரச்சினைகள் உருவெடுத்த வண்ணமுள்ளன.

வாழ்க்கைச் செலவு, அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகள், டொலர் பிரச்சினை, முறையற்ற நிதி மற்றும் அரச நிர்வாகம், தேசிய சொத்து விற்பனைகள், சர்வதேச உறவுகள் போன்று பல சிக்கல்களைச் சந்தித்து வரும் நிலையில், ஆளும் தரப்பின் பங்காளர்களாக இருந்து கொண்டு, இடதுசாரிகள் மக்கள் சார்ந்து செயற்பட வேண்டிய அரசியல் தற்றுணிபை இழந்து இருக்கிறார்கள்.

இன்று சிங்கள தேசிய வாதம், சிங்கள தேசம், பௌத்த தேசம், பௌத்த தேசிய உணர்வு, தானாகக் குறுகிய பார்வையைத் தன்னகத்தே வரையறுத்துக் கொண்டுள்ளமை பிழை என்பதை உணரும் காலம், அதை வடிவமைத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அஹிம்சை போதிக்கும் பிரிவினரிலிருந்து துவம்சமும் துவேசமும் தீவிரமாக வெளிப்பட முடியாது; எங்கு கோளாறு ஏற்பட்டது என்பதை, இந்தச் சுதந்திர தினத்தில் சிந்தித்து, போக்கைச் சரிசெய்ய முன்வருவது, உள்ளக சுதந்திரத்தின் அர்த்தத்தை யதார்த்தமாக்கும்.

மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளாலும் சமூக மேம்பாட்டு கரிசனையாலும் மனிதாபிமான உணர்வாலுமே ஒருமதத் தலைவரின் சமூக அடையாளம் வடிவம் பெற வேண்டும்.

பெரும்பான்மை, சிறுபான்மை இன அரசியல்வாதிகள், சாதாரன மக்களுக்குள் இருக்கும் அடிப்படையான நிலைப்பாடுகளை, நேர்மையாக வளர்த்தெடுத்து, சமூக மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். சமூக விழிப்பியல் மேலோங்கிய நாட்டுப் பிரஜைகளாகத் தங்களைத் தாமே தகவமைப்படுத்திக் கொள்ள, இன்றைய சுதந்திர தினத்தில் உறுதி பூண்டு, ஐக்கியமான தேசிய உணர்வை வெளிப்படுத்த, எம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளுவோம்.

ஐக்கிய இலங்கைக்குள், ஏனைய இனத்தவர்களுக்கு பாதுகாப்பற்ற தேசியவாதமாக, மேலெளும் தேசியவாதங்களைத் தோற்கடிப்போம். இந்நாட்டில் புத்திஜிவித்துவ முற்போக்கு பௌத்த தேரர்கள் உள்ளிட்ட சமய தலைவர்கள், இது பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

இல்லையெனில், இந்நாட்டின் கிராமப்புற சாதாரண குடிமகனிலிருந்து, திட்டமிடப்படாத இனவாத செயற்பாடுகள் வெளிவருவதைத் தடுக்க முடியாமல் போகும்.





இனவாத அரசியலின் தீவிரப் போக்கைத் தணிப்பது, சாதாரன பொது மக்கள் சார்ந்த விடயம். வாக்களிக்கும் மக்கள், தங்கள் வாக்குரிமைகளை விழிப்பு நிலையில் பிரயோகிக்க வேண்டும். இனத்துவ ரீதியான சிந்தனைகளிலிருந்து வெளிவந்து, பொதுவெளியில் சகல இனமக்களும் திறந்த மனப்பான்மையுடன் சிந்திக்க வேண்டும்.

சந்தர்ப்பவாதம் என்பது, மிகப் பெரிய ஆபத்தான விடயம். இது பல சந்தர்ப்பங்களில் பௌத்த சமூகத்திலிருந்து வெளிப்பட்டாலும் அவ்வப்போது தமிழ், முஸ்லிம் சமூகங்களில் இருந்தும் வெளிப்பட்டும் வருகின்றது. இதிலிருந்தும் நாங்கள் மிக அவசரமாக விடுபட வேண்டும்.

74ஆவது சுதந்திர தின வருடம், தொடர்ச்சியான சவால் நிறைந்த வருடமாக இருக்கப்போகிறது. ஒருபுறம், ஏலவே உள்ள கோவிட்-19 பெருந்தொற்று சவாலும் உள்ளக ஆட்சி நிர்வாகத்தால் ஏற்படும் சவாலும் என்று இவை தொடரப் போகின்றன.

குடிமக்களாக எமது கடமைகளையும் பொறுப்புகளையும் யதார்த்தமான பங்கேற்புடன் முழுமனதாக நிறைவேற்றுவோம்; ஒன்றினைந்து தேசிய வலுவை சக்திப்படுத்துவோம்.

'சுதந்திரம் இல்லாத வாழ்க்கை, உயிர் இல்லாத உடல் போன்றது' -கலீல் ஜிப்ரான்.

# தனித்துவம் மிக்க தேசிய கொடி





1948இல், போர் வாளேந்திய சிங்கக் கொடியுடன் டி. எஸ். சேனாநாயக்க, காணப்படுகின்றார்.



என். மிருணாளினி

சுதந்திர தினமான இன்று, எமது தேசிய கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்துக்கு, 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத்தனத்தில் இருந்து எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்தது. அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசிய கொடியைத் தம் வீடுகளிலும் வேலைத் தளங்களிலும் பொது இடங்களிலும் பாடசாலைகளிலும், பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று சுதந்திர தினத்தில், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கம்பீரமாக தேசிய கொடி பறப்பதை அவதானிக்க முடிகின்றது. ஒரு நாட்டில் பெருமையை பறைசாற்றும் சின்னமாக தேசிய கொடி மதித்து கௌரவிக்கப்படுகிறது.

தேசிய கொடியை கொடிக்கம்பத்தில் ஏற்றும் போதும், அதைக் கம்பத்திலிருந்து இறக்கும் போதும், ஒரு நாட்டின் தலைவருக்குக் கொடுக்கப்படும் மரியாதையின் அதே அளவு தேசிய கொடிக்கும் கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின் போது, தேசிய கொடி சகல அரசாங்க கட்டடங்களிலும் கம்பீரமாகப் பறக்கவிடப்படுகிறது.

பலவகையான கொடிகளை, ஓர் இடத்தில் பறக்கவிடும் போது, அவற்றை விட சற்று உயரத்தில் குறித்த நாட்டின் தேசிய கொடி பறக்கவிடப்பட வேண்டும் என்பது நியதியாகும்.

1972ஆம் ஆண்டில் இலங்கை ஒரு ஜனநாயக குடியரசாக மாற்றமடைந்த போதும், 1978ஆம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட போதும், எமது நாட்டின் தேசிய கொடியில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய இராச்சியத்திடமிருந்து இலங்கை விடுதலை அடையும் வேளையில், இலங்கை நாட்டுக்கான தேசிய கொடிக்கான தேவை ஏற்பட்டது. அதுவரை, பிரித்தானிய ஒன்றியக் கொடியே, இலங்கையின் தேசிய கொடியாக இருந்து வந்தது.

சுதந்திரத் தினத்தன்றுக்கு முன்னர் கொடி குறித்த முடிவுக்கு வர முடியாத நிலையில் 1815இல் கண்டியில் ஆங்கிலேயர்களால் இறக்கி வைக்கப்பட்ட சிங்கக்கொடி 133 ஆண்டுகளுக்கு பின்னர் 1948ஆம் ஆண்டு, 'ஒருங்கிணைந்த இலங்கைக்குரிய கொடி'யாக மீண்டும் முதலாவது சுதந்திர தினத்தன்று சுதந்திர சதுக்கத்தில் ஏற்றப்பட்டது.

1948இல் சுதந்திரம் கிடைக்கும்போது, இலங்கையின் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க, இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற போர் வாளேந்திய சிங்கக் கொடியே, சுதந்திர இலங்கையைக் குறிக்கும் சிறந்த கொடியாக அமையும் எனத் தெரிவு செய்தார்.

எனினும், அக் கொடியில் தங்கள் இனத்துவங்களை பிரதிபலிக்கும் அடையாளங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அதன்பிரகாரம், சில நாள்களின் பின்னர், தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பான பாராளுமன்றக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஜே.எல். கொத்தலாவல, டி.பி. ஜாயா, எல்.ஏ. ராஜபக்ஷ, எஸ். நடேசன், ஜே. ஆர். ஜயவர்தன என்போர் உள்ளடங்கியிருந்தார்கள்

தேசிய கொடியைத் தெரிவு செய்வதற்காக பிரதமர் நியமித்திருந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கவும், செயலாளராக கலாநிதி செனரத் பரண விதாரனவும் செயற்பட்டனர். பெரும்பான்மை சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் வாளேந்திய சிங்கக் கொடியில் சிறிதளவு மாற்றத்தையேனும் செய்வதற்கு இணங்காமையால் பத்துத் தடவைக்கு மேல் தெரிவுக் குழு கூடியபோதும் தீர்க்கமான முடிவு எதனையும் பரிந்துரைக்க இயலவில்லை.

பொது மக்கள் கருத்துக் கோரப்பட்டபோது பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்கள் நான்கையும் சேர்ந்தவர்களால் வணக்கத்துக்குரிய ஒருதலமாகப் போற்றப்படும் ஆதாமின் சிகரமாக அழைக்கப்படும் சிவனொளிபாத மலையையே சின்னமாக தேசிய கொடி கொண்டிருத்தல் வேண்டும் என்று யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் வலியுறுத்தியிருந்தார்.

ஆயினும் திரைக்குப் பின்னால் சம்பவித்திருந்த சூழ்ச்சியால் திடீரென்று வாளேந்திய சிங்கக் கொடிக்குப் புறத்தே தமிழ், இஸ்லாமிய மக்களைப் பிரதிபலிப்பதாக இரு வரைகோடுகளைத் தேசிய கொடியில் இணைப்பதற்கு ஜீ.ஜீ.பொன்னம்பலமும் ரி.பி.ஜாயாவும் இணக்கம் தெரிவித்தனர்.

1950ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி இந்தக்குழு இலங்கையின் தேசிய கொடிக்கான தமது பரிந்துரையை வெளியிட்டது. இந்தக் குழுவின் பெரும்பான்மையோர் எடுத்த இந்த முடிவுக்கு செனட்டர் நடேசன் இணக்கம் தெரிவிக்கவில்லை; கையெழுத்திடவுமில்லை. அதற்கான காரணங்களைத் தெரிவித்த அவர் 15.2.1950 அன்றே ஓர் அறிக்கையையும் வெளியிட்டார்.

இக்குழுவின் பரிந்துரைக்கமைய, தேசிய கொடியில் சமஅளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டன. செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும் பச்சை நிறப் பட்டை முஸ்லிம்களையும் அடையாளப்படுத்துவதாக இருந்தது.

இலங்கையின் தேசிய கொடி, மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும்பகுதியை அடக்கியுள்ள மற்றப்பகுதி கருஞ் சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மர இலைகளையும் கொண்டுள்ளது.

சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரசிலைகள் கொடியின் நான்கு முலைகளிலும் இணைக்கப்பட்டன. இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது.

இலங்கையின் இன்றைய தேசிய கொடி பின்வரும் அம்சங்களை உடையதாகும்.

சிங்கம்: தலை - நாட்டின் தலைவர்

சிங்கத்தின் தலையில் காணப்படும் சுறுள் முடி - சமயம், தியானம், அறிவு

சிங்கத்தின் தாடி - தூய்மையான வார்த்தை

சிங்கத்தின் மூக்கு - புத்திக்கூர்மை

சிங்கத்தின் முன் இரண்டு கால்கள் - தூய்மையான முறையில் செல்வத்தைக் கையாளல்

சிங்கத்தின் உடல் - வீரம்

சிங்கத்தின் வால் - நீதி, நேர்மையான ஆட்சி

சிங்கத்தின் வாள் - அநீதிக்கு எதிரான போராட்டம்

சிங்கத்தின் வாளின் பிடி - நீர், நெருப்பு, ஆகாயம், பூமி ஆகிய கூறுகள்

அரச இலைகள் நான்கு: அன்பு (மெத்தா) - ஒற்றுமையை பலப்படுத்தல்; காருண்யம் (கருணா) -துன்பத்திலிருந்து மீட்சி பெறல்; மகிழ்ச்சி (முதிதா) - மற்றவர் மகிழ்ச்சியில் தானும் மகிழ்தல்; பற்றின்மை (உபேக்கா) - நன்மை, தீமை இரண்டையும் சமமாக மதித்தல் ஆகியவை ஆகும்.

சிவப்பு நிறம்: சமத்துவம் மிக்க சமுதாய அமைப்பினை உருவாக்குதல்.

மஞ்சள் நிறம்: அறிவு, சமாதானம், அஹிம்சை, சத்தியம், தர்மம் என்பவற்றை வெளிப்படுத்தல்.

செம்மஞ்சள் நிறம்: தமிழர்.

பச்சை நிறம்: முஸ்லிம்கள்

இவ்வாறாக, இலங்கையின் தேசிய கொடி பல அம்சங்களைத் தன்னகத்தே அடையாளங்களாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதியன்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அன்று, இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் கொடி ஏற்றப்பட்டு, பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டமை, எமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

இத்தனை சிறப்புவாய்ந்த தேசிய கொடியானது, ஒரு தேசிய தலைவரின் மரணம், இயற்கை அனர்த்தத்தால் ஏற்படும் மனித அழிவு போன்ற சம்பவங்களின் போது, தேசத்தின் சோகத்தைக் காண்பிக்கும் முகமாக, தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின் போது தேசிய கொடியை பயன்படுத்திய பின்னர், அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி, நெறிப்படி மடித்து வைக்க வேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விட வேண்டும்.

தேசிய கொடியை தலைகீழாக, கவனக்குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை குற்றவியல் சட்டத்தின்படி ஒரு தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

தேசிய கொடியை பறக்கவிடும் போது, அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ, வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசிய கொடியை கட்டுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதுபோல், தேசிய கொடிகளை அச்சிடும் போது, அச்சகங்கள் அதன் நிர்ணயிக்கப்பட்ட நியம வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசிய கொடியை பாதைகளிலும் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும்.

1951ஆம் ஆண்டிலும் 1972ஆம் ஆண்டிலும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கொடியில் சில திருத்தங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிலர் தேசிய கொடியை பொலிதீனில் அச்சிட்டு, தேசிய வைபவங்களின் போது தெருத்தெருவாகக் கட்டிவிடுவதுண்டு. அந்த வைபவம் முடிவடைந்த பின்னர், ஒருவருமே அவற்றை அகற்றி விடவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இறுதியில் கொடிகள் வீதியில் அநாதரவாக விழுந்துவிடும் போது, அவற்றை பலரும் பொருட்படுத்தாமல் மிதித்து செல்கின்ற வேதனைக்குரிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஆகவே, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தேசிய கொடியை அவமதிக்கக்கூடிய வகையில் அவற்றை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச கிரிக்கட் போட்டிகளின் போது, இலங்கையின் தேசிய கொடி மாத்திரமின்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தேசிய கொடிகள் தரக்குறைவான முறையில் பயன்படுத்துவதுண்டு. சில பெண்கள் தேசிய கொடியை பயன்படுத்தி, ஆடைகளைத் தைத்து விடுவதுண்டு. வேறு சிலர், கிரிக்கட் போட்டியில் ஆரவாரம் செய்யும் போது, தேசிய கொடியை இடுப்பில் கட்டிக்கொண்டும், தோளில் போர்த்திக் கொண்டும் ஆடுவதும், அப்பொழுது அந்தக் கொடி நழுவி கீழே விழும் சம்பவங்களும் நடைபெறுவதும் இப்போது அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இனிமேல் நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசிய கொடியை கௌரவிக்கக்கூடிய நற்பண்புகளை, இப்போது பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தேசிய கீதம் இசைக்கப்படும் போது, நாம்அனைவரும் எங்களை அறியாமலேயே எழுந்து நின்று, சிரம் தாழ்த்தி அதற்கு மாரியாதை செலுத்துவதைப் போன்று, தேசிய கொடி கட்டடங்களில் ஆடம்பரமாக பறந்து கொண்டிருக்கும் போது, அதனை அண்ணார்ந்து பார்த்து சிரம் தாழ்த்தி கௌரவித்தல் அவசியமாகும்.

74 ஆவது சுதந்திரத்தினமான இன்று, நாட்டிலுள்ள எல்லா வீடுகளிலும் தேசிய கொடியை பறக்கவிடுதல் அவசியமாகும். இதன்முலமே, இந்நாட்டு மக்கள் தற்போது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியோடு அனுபவித்து வருகிறார்கள் என்பதையும் எங்கள் நாட்டில் வலுவடைய வேண்டிய வரும் தேசிய ஐக்கியத்தையும் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 04 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.